விலை: 50.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 04 வியாழக்கிழமை (19.11.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 336

கலயாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

**மனைவியை எரித்து கொன்றவருக்கு மரண தண்டனை**
நீதிபதி இளஞ்செழியன் தீர்ப்பு
11ஆம் பக்கம் பார்க்க

## மாவீரர் நாளை அனுஷ்டிக்க அனுமதி தேவையில்லை
### எம்.கே.சிவாஜிலிங்கம்

(யாழ்ப்பாணம்)
மாவீரர் நாள் நினைவேந்தலை அனுஷ்டிக்க நாம் யாரிடமும் அனுமதிபெறத் தேவையில்லை என முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். 19

## 100 வீடுகளைக் கொண்ட குடியிருப்பு திட்டம் நேற்று
### யாழ்.நாவற்குழியில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் “சியபத்த” உங்களுக்கு ஒரு வீடு உங்கள் நகரத்தில் என்ற கருப்பொருளில் யாழ்.நாவற்குழியில் 100 வீடுகளை கொண்ட குடியிருப்பு திட்டம் அமைப்ப 19

# மாவீரர் தின நிகழ்வுகள் தடையின்றி நடத்தப்படும்
## தேவையெனில் அரசுடன் பேசுவோம்
### தமிழ்க் கட்சிகள் கூட்டத்தில் முடிவு

(யாழ்ப்பாணம்)
தமிழினத்துக்காக தமது உயிரை ஆகுதியாக்கிய மாவீரர்களை நினைவுகூர்ந்து மாவீரர் தின நிகழ்வை தடையின்றி கடைப்பிடிக்க வேண்டும் என தமிழ்க் கட்சிகள் கூட்டத்தில் நேற்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மேலும் மாவீரர் தின நிகழ்வுகளை தடையின்றி நடத்துவதற்கு தேவைப்பட்டால் அரசாங்கத்துடன் பேசுவோம் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார். (19ஆம் பக்கம் பார்க்க)

### திருநெல்வேலியில் வயோதிபரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)
திருநெல்வேலி, பலாலி வீதியில் வயோதிபர் ஒருவரின் சடலம் நேற்றுப் பிற்பகல் மீட்கப்பட்டுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த 7 பிள்ளைகளின் தந்தையான 19

ஜோதிடக் கலாமணி
**சிவல்புரி சிங்காரம்** எழுதும்
கார்த்திகை மாத இராசி பலன்கள்
உள்ளே

கோப்பாய் கல்வியியற் கல்லூரியில் இடம்பெறும்
## பணப் பரிமாற்றம் மூலம் கொரோனா சமூகத்தில் பரவும் அபாயம்
### மருத்துவர் சி.யமுனாநந்தா எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)
கோப்பாய் கல்வியியற் கல்லூரி கொரோனா சிகிச்சை நிலையத்தில் ஒரு சிலரது பொறுப்பற்ற செயற்பாட்டால் கொரோனா சமூகத்தில் பரவும் அபா 19

அடுத்த 3 வருடங்களுக்கு
## கொரோனாவுடன் வாழப் பழகுங்கள்
சுகாதார அமைச்சர் பவித்ரா

9ஆம் பக்கம் பார்க்க

வடக்கு, கிழக்கு மாகாணங்களை
## அபிவிருத்தி செய்வதற்கே சர்வதேச கடன்களை வாங்கினோம்

பந்துல குணவர்த்தன தெரிவிப்பு
3ஆம் பக்கம் பார்க்க

## பயம் கொண்ட யுகம் கடந்துவிட்டது நாட்டு மக்கள் அச்சப்படத் தேவையில்லை
### நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி விசேட உரை



(கொழும்பு)
இராணுவத்தைக் காட்டிக் கொடுத்து குறுகிய இலாபத்திற்காக ஒப்பந்தம் செய்து கொள்ளும் யுகம் நிறைவடைந்து விட்டதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன், கோவிட் -19 வைரஸ் பரவலை 19

கட்டாய திருமணம் செய்ய முடியாது
## முன்னணி தொடர்பில் உறுதியான தீர்மானங்கள் எடுங்கள்
### தமிழ்க் கட்சிகள் கூட்டத்தில் காரசாரம்

(யாழ்ப்பாணம்)
தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் இயங்கும் கட்சிகள் கூடி தமிழீழ மாவீரர் 19

நாட்டில் நேற்றும்
## +325 தொற்றாளர்கள்

(கொழும்பு)
நாட்டில் நேற்றும் 325 பேருககு 19

## கொரோனாவால் நேற்றும் 3 மரணம்
### உயிரிழப்பு 69 ஆக உயர்வு

(கொழும்பு)
நாட்டில் கோவிட் -19 நோயால் மேலும் 3 பேர் உயிரிழந்துள்ளனர் என்று 19

### 2021 வரவு – செலவு திட்டத்தில்

# இறக்குமதி உற்பத்திகளை மட்டுப்படுத்த அதிக கவனம்

## இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க

(கொழும்பு)

2021 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தில் தேசிய உற்பத்திகளுக்கு அதிகளவில் முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி உற்பத்திகளை மட்டுப்படுத்த அதிகளவில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

2021 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பாதீடு தொடர்பில் எதிர்த்தரப்பினர் மாறுபட்ட கருத்துக்களை குறிப்பிட்டுக் கொள்கிறார்கள்.

அரச ஊழியர்களுக்கு எவ்வித நிவாரணமும் வரவு - செலவு திட்டம் ஊடாக முன்வைக்கப்படவில்லை என குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. அரச ஊழியர்களின் நலன்சார் பல திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

தேசிய உற்பத்திகளை மேம்படுத்த வரவு -செலவு திட்டத்தில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இறக்குமதி உற்பத்திகளை மட்டுப்படுத்தும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தேசிய உற்பத்தியாளர்களின் முன்னேற்றத்திற்கு தடையாக இருந்த இறக்குமதி உற்பத்திகள் தடை செய்யப்பட்டுள்ளன. தேசிய உற்பத்திகளை பலப்படுத்தப்படுத்த அதிக நிதி ஒதுக்கப்படும் என்றார். (ம-03)

# யுத்த வரவு - செலவு திட்டத்தை அரசாங்கம் முன்வைத்துள்ளது

## சபையில் சிறிதரன் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

முழு நாடும் கொரோனா வைரஸ் தாக்கத்திற்கு முகங்கொடுத்துள்ள நிலையில் சுகாதார துறைக்கே அதிகளவில் நிதி ஒதுக்கியிருக்க வேண்டும். ஆனால் இப்போதும் அரசாங்கம் பாதுகாப்புத் துறையை பலப்படுத்தும் நோக்கத்தில் யுத்த வரவு - செலவு திட்டமொன்றையே முன்வைத்துள்ளனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் சபையில் குற்றம் சுமத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற 2021ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான முதலாம் நாள் விவாதத்தில் உரையாற்றிய போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

இலங்கையில் கொரோனா நெருக்கடிகள் எழுந்த வேளையில் யுத்தத்தை கட்டுப்படுத்தியதை போன்று கொரோனாவையும் அடக்கிவிடுவோம் என்று சில அமைச்சர்கள் மார்தட்டினர். அந்த நேரத்தில் ஐந்து அல்லது ஆறுபேர்தான் நாட்டில் கொரோனாவினால் உயிரிழந்திருந்தனர். ஆனால், தற்போது 69 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர். நாட்டில் இன்று மிகப்பெரும் சுகாதார நெருக்கடி உள்ள நிலையில் சுகாதாரத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி மிகவும் குறைவு என குற்றம் சுமத்தினார். (ம-03)


**யா/ மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை**

**தரம் 6 (2021) – அனுமதி**

**(தமிழ், ஆங்கில மொழி மூலம்)**

2021 இல் தரம் 6 இல் அனுமதி பெறவிரும்புகின்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் வார நாட்களில் காலை 9.00 - 12.30 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி : 04.12.2020**

(C-717) அதிபர்


# கடலில் மிதந்துவந்த மர்மப் பொருளை பிரித்து பார்த்தவர் மயக்கம்

## வடமராட்சி கிழக்கில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி கடற்பகுதியில் மீன்பிடிக்க சென்றிருந்த போது கடலில் கிடைத்த மர்ம பொருளை பிரித்து பார்த்தவர் மயங்கி விழுந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் வீடு திரும்பினார்.

நேற்று இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் வடமராட்சி கிழக்கு வெற்றிலைக் கேணியைச் சேர்ந்த தியாகராசா அன்ரன் (வயது-51) என்பவரும் அவருடைய மைத்துனரும் படகில் மீன்பிடிக்கச் சென்றுள்ளனர். கரையிலிருந்து 2 கடல் மைல் தொலைவில் மர்மப் பொருள் ஒன்று மிதந்து வந்துள்ளது.

எண்ணைக் கான் போன்று காணப்பட்ட குறித்த பொருளை அன்ரன் திறந்து பார்த்துள்ளார். அதிலிருந்து வெளியேறிய மர்மப் புகையை நுகர்ந்ததை அடுத்து அவர் மயங்கி வீழ்ந்துள்ளார். இதனை அடுத்து மைத்துனர் அவரை கரை சேர்த்து மருத்துமனைக்கு கொண்டு செல்லப்பட்டு. பின்னர் அவர் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-03,64)


**31 ஆம் நாள் நினைவு கூரலும் நன்றி நவிலலும்**



அமரர்

**வெற்றிவேல் பவளரத்தினம்**

(சித்தி)

கடந்த 20.10.2020 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்னையின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு எமது குடும்பத்தின் தலைவியாய் விளங்கி பண்பால், அன்பால் எம்மை நல்வழிப்படுத்தி இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வம் வெற்றிவேல் பவளரத்தினம் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆறுதல் கூறுவதற்காக வருகைதந்து எமது துயரத்தில் பங்கு கொண்டவர்களுக்கும், ஆறுதல் அளிக்கும் வகையில் உள்ளூரிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களிற்கும், கண்ணீர் அஞ்சலிகள், பனர்கள் வெளியிட்டவர்களுக்கும், இறுதிக்கிரியைகளிலும், வீட்டுக் கிரியைகளிலும் சீர உதவி புரிந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(4682)

விளாத்தியடி லேன், உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். 077 690 1389 குடும்பத்தினர்



**11ஆம் ஆண்டின் நினைவலைகள்...**



அன்னை மடியில் 03.02.1939

ஆண்டவன் அடியில் 23.10.2009

அமரர்

**காசிப்பிள்ளை செல்லத்துரை**

அப்பா !

நித்தமும் நினைவுகள் நெஞ்சினில் நிலைத்திருக்க
ஆண்டுகள் பதினொன்று ஓடிமறைந்த தேனோ? அப்பா...
நல்லவை பல கூறி நலமுடன் நாம் வாழ்ந்திட
நன்றாக பாடுபட்டீர்கள் அப்பா...
இவ் உலகில் நாம் இருக்கும் வரை
உங்கள் நினைவுகளைச் சுமந்து நீங்கள் காட்டிய நல்வழிகளில்
வாழ்ந்து கொண்டிருக்கும்....


டச் றோட், உடுவில். (4676) உங்கள் அன்பு – மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# தமிழீழத்திற்காகவே பிரபாகரன் போராடினார் ஈழம் என்ற சொல் பிரிவினைவாதத்திற்குரியது அல்ல

## தெளிவுபடுத்தும் தேசப்பரிய

(கொழும்பு)

**ஈழம் என்ற சொல் தமிழ் பிரிவினை வாதத்திற்காக பயன்படுத்தப்படுவதாக ஓர் மாயை உருவாக்கப்பட்டுள்ளது என்றும், இது எந்த வகையினும் நியாயமானதல்ல எனவும், இதனை தகர்த்து எறிய வேண்டும் என்றும் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.**



நேற்று முன்தினம் இடம்பெற்ற நேர்காணலில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதில் வழங்கும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஈழம் என்ற சொல்லில் எவ்வித பிழையும் இல்லை. ஸ்ரீலங்கா என்பதற்கு சிங்கள மொழியில் பல்வேறு பெயர்கள் உண்டு. அதேபோன்று இலங்கை என்பதற்கு ஈழம் என்ற ஓர் மாற்றுப் பெயர் உண்டு.

ஈழம் என்ற சொல் தமிழ் பிரிவினைவாதத்திற்காக பயன்படுத்தப்படுவதாக ஓர் மாயை உருவாக்கப்பட்டுள்ளர், இது எந்த வகையிலும் நியாயமானதல்ல,இதனை தகர்த்து எறிய வேண்டும்.

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அமரர் டொக்டர் அப்துல்கலாம்கூறுவது போன்று "நான் முதலில் இந்தியன் அதன் பின்பே தமிழ் நாட்டைச் சேர்ந்த இஸ்லாமிய மதத்தை வழிபாடு செய்கின்றவன்" என்று கூறுவதில் தவறில்லை.

எந்தவொரு தமிழ் புத்தி ஜீவியிடமும் இது குறித்து கேட்கலாம் ஈழம் என்பது இலங்கைக்கான மறுபெயரே தவிர அது பிரிவிணைவாத சொல் அல்ல.ஈழம் என்ற சொல்லுக்கு இலங்கையில் தடையில்லை அதனை எவ்வாறு சட்டவிரோதமான சொல்லாக கருத முடியும்?

எமது தேசிய கீதத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு காணப்படுகின்றதல்லவா? அதில் ஈழம் என்ற சொல் உள்ளது அல்லவா? ஈழ சிரோமணி என்ற சொல் தேசிய கீதத்தில் காணப்படுகின்றது.

இலங்கை, ரத்தினதீபம் என்பது போன்றே இலங்கைக்கு ஈழம் என பெயருள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஈழத்திற்காக போராடவில்லை. அவர் தமிழீழத்திற்காக போராடினார். ஈழம் என்ற சொல் அடிப்படைவாதமாக கருதப்படவே முடியாது.

அவ்வாறு கருதினால் அது பாரதூரமான தவறாகும், நாட்டை பிளவடையச் செய்வதற்கு தாம் ஆதரவளிக்கும் நபர் கிடையாது என்ற போதிலும் ஈழம் என்ற சொல்லை பிரிவினையாக கருதுவது இன்னும் மக்களை பிளவுபடுத்தவே செய்வதாகும்.

சிங்கள மக்கள் தமிழர்களை எதிர்க்கிறார்கள், தமிழ் மக்கள் சிங்களவர்களை எதிர்க்கிறார்கள் என்ற மாயை காணப்படுகின்றது. இவ்வாறான மாயைகள் தகர்க்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# அதிக ஆபத்தில் கொழும்பு

(கொழும்பு)



கொழும்பு நகர சபை பிரதேசங்களில் கொரோனா வைரஸ் தொற்று அவதான மிக்க நிலையில் உள்ளதாக தொற்று நோய் விஞ்ஞான பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட தொற்று நோய் விஞ்ஞான பிரிவின் பிரதான வைத்தியர் சுதத் சமரவீர இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்போது கொரோனா வைரஸ் ஓரளவு கட்டுப்பாட்டில் உள்ள போதிலும் கொழும்பு நகர சபை மற்றும் மேல் மாகாணத்தில் இன்னமும் அதிக அவதானமிக்க நிலையே காணப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# இன்டர்போலின் உதவியை நாடும் குற்றவியல் புலனாய்வுத்துறை

(கொழும்பு)

நாட்டில் கொரோனா இறப்பு தொடர்பான போலிச் செய்திகளை சமூக ஊடகங்களில் பரப்புவது தொடர்பாக ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியாவில் வசிக்கும் இரண்டு பேரை கண்டுபிடிக்க குற்றவியல் புலனாய்வுத்துறை சர்வதேச பொலிஸ் அமைப்பான இன்டர்போலின் உதவியை நாடியுள்ளது.

கொரோனா காரணமாக தெருக்களில் இறந்த உடலங்கள் கண்டெடுக்கப்பட்டதாக கூறி, பேஸ்புக், டுவிட்டர் மற்றும் இன்ஸ்டாகிராம் போன்ற சமூக வலைத்தளங்களில் போலியான செய்திகள் பரப்பப்பட்ட நிலையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# கோவிட் ஒழிப்பு செயலணிக்கு மீண்டும் அனில் ஜாசிங்க

(கொழும்பு)

எதிர்வரும் நாட்களில் நடைபெறும் கொவிட் ஒழிப்பு செயலணி கூட்டத்திற்கு முன்னாள் சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்தியர் நிபுணர் அனில் ஜாசிங்கவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி இதனை தெரிவித்துள்ளார்.



அனில் ஜாசிங்கவிற்கு பதவி உயர்வாக மாத்திரம் சுகாதார அமைச்சின் செயலாளர் பதவி வழங்கப்பட்டதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மேலும் சுகாதார அமைச்சின் ஊடகப் பேச்சாளராக கடமையாற்றிய டாக்டர் ஜயருவான் பண்டார தனது சுய விருப்பின் பேரிலேயே அந்த பதவியிலிருந்து விலகியதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ-4)

# நாட்டின் நிலைமை பதற்றம்தான் அதையும் வெற்றி கொள்வோம்

## இராணுவத் தளபதி


(கொழும்பு)

நாட்டின் தற்போதைய நிலைமை பதற்றம் தான் என்ற போதும், நாம் அஞ்ச மாட்டோம் என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸின் மூன்றாவது அலைக்கும் விரைவில் முற்றுப்புள்ளி வைத்தே தீருவோம் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மூன்றாவது அலையின் தாக்கம் வீரியமாக இருப்பதால் அதனை எம்மால் உடனே கட்டுப்படுத்த முடியவில்லை. இந்த நிலையில் நாட்டின் தற்போதைய நிலைமை பதற்றம் தான்.

ஆனாலும், நாம் அஞ்ச மாட்டோம். கொரோனா வைரஸின் மூன்றாவது அலைக்கும் விரைவில் முற்றுப்புள்ளி வைத்தே தீருவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)



# வடக்கு-கிழக்கின் அபிவிருத்திக்கே சர்வதேச கடன்களை வாங்கினோம்

## பந்துல விளக்கம்

(கொழும்பு)



இலங்கை கடன் நெருக்கடியில் சிக்கிக்கொண்டுள்ள போதிலும் அவற்றில் இருந்து விடுபடும் மாற்று வேலைத்திட்டம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்திடம் இருப்பதாகவும், வடக்கு- கிழக்கு பிரதேசங்களின் அபிவிருத்திக்காகவே அதிகளவில் சர்வதேச கடன்களை வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன சபையில் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான முதலாம் நாள் விவாதத்தில் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டுவரை நாட்டில் எந்தவொரு பொருளாதார வளர்ச்சியும் ஏற்படவில்லை.

கடந்த 2014 ஆம் ஆண்டுக்கு முன்னர் வரையில் இலங்கை மத்திய வருமானம் பெரும் நாடாக மாறியது. ஆனால் 2014 ஆம் ஆண்டின் பின்னர் நிலைமை மாற்றம் கண்டது.

2014 ஆம் ஆண்டு நாட்டின் தலா வருமானம் 7.4 வீதமாக இருந்தது. ஆனால் இதுவே 2019 ஆம் ஆண்டு 2.3 வீதத்திற்கு குறைவடைந்தது. இதேபோல் சகல துறைகளிலும் வீழ்ச்சியே காணப்பட்டுள்ளது.

எமக்கு நாட்டை ஒப்படைக்கும் போது மிக மோசமான நாடாகவே காணப்பட்டது. ஆனால் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் நல்லாட்சி அரசாங்கம் எந்தவித சவால்களும் இல்லாத நாட்டையே பொறுப்பேற்றனர். ஆனால் மீண்டும் நாட்டை ஒப்படைக்கும் போது நாட்டினை நாசமாக்கியே கொடுத்தனர்.

எனினும் நாம் கடன்களை செலுத்தும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து நாட்டினை அபிவிருத்தி நிலைக்குக் கொண்டு செல்வுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# வாகன விபத்துக்கள் மீண்டும் அதிகரிப்பு

**(கொழும்பு) நாட்டில் வாகன விபத்துக்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருதத்துத் தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக அமுல்படுத்தப்பட்டிருந்த கட்டுப்பாட்டு விதிமுறைகள் இலகுபடுத்தப்பட்டுள்ள நிலையில் வாகன விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

வாகன சாரதிகள் மற்றும் பாதசாரிகளின் கவனயீனம் காரணமாக இவ் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

எனவே, வாகன சாரதிகள் மற்றும் பாதசாரிகள் வீதி போக்குவரத்து விதிமுறைகளை முறையாகபின்பற்றுவதன்ஊடாகவாகன விபத்துக்களில் இருந்து பாதுகாத்துகொள்ள முடியும்என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# பிணையில் விடுவிக்கப்பட்ட கைதிகள் உடனடியாக தொடர்பு கொள்ளவும்

(கொழும்பு)

கடந்த 15 நாட்களில் காலியில் உள்ள பூஸா சிறைச்சாலையில் இருந்து பிணையில் விடுவிக்கப்பட்ட அனைத்து கைதிகளும் உடனடியாக சம்பந்தப்பட்ட பகுதியில் உள்ள பொது சுகாதார பரிசோதகர்கள் அல்லது சுகாதார அதிகாரிகளிடம் தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்ட கைதியொருவர் கடந்த புதன்கிழமை கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதையடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 31 ஆம் திகதி முதல் காலி சிறைச்சாலையிலிருந்து 30 க்கும் மேற்பட்ட கைதிகள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# ஐ.நா.உயர்மட்டத்தலைவர் இலங்கை விஜயம்?

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் உயர்மட்டப் பிரதிநிதியொருவரை செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டெரெஸ், விரைவில் இலங்கைக்கு அனுப்பவுள்ளார் என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதன்படி ஐ.நாவின் அரசியல் பிரிவுத் தலைவர் ரோஸ் மேரி டிகார்லோவே (Rosemary A. DiCarlo) இவ்வாறு இலங்கைக்கு வரவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நாவின் கிளை அமைப்புகளுள் ஒன்றான மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலிருந்து இலங்கை அரசு விலகியுள்ள நிலையில், பொறுப்புக்கூறல் கடப்பாட்டை நிறைவேற்ற முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் தொடர்பில் அவதானம் செலுத்துவதை மையப்படுத்தி ரோஸ் மேரி டிகார்லோவின் இலங்கை பயணம் அமையும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)



மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் ஈழுமக்கள் ஜனநாயக கட்சியின் மானிப்பாய் பிரதேச இளைஞரணியின் ஆதரவுடன் கடந்த ஞாயிற்றுக் கிழமை வைத்தியசாலையில் இரத்ததான முகாம் இடம்பெற்றது. (படம்: ரவிசாந்)

# இதுவரை 601 துப்பாக்கிகள் மீட்பு

(கொழும்பு)

வருட ஆரம்பத்திலிருந்து இதுவரையில் பொலிஸாரின் சுற்றிவளைப்பின் போது 601 சட்டவிரோத துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு அவர் தெரிவிக்கும் போது இதனைத் தெரிவித்தார்.

பொலிஸார் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் மாத்திரமல்லாது ஏனைய குற்றத் தடுப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். அதற்கமைய கொலை, கொள்ளை, கடத்தல் சம்பவங்கள், உள்ளிட்ட குற்றச் செயல்களுக்கு எதிரான நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றனர்.

அதுமாத்திரமல்லாது சுற்றிவளைப்புக்கள், சட்டவிரோத பொருட்களை கைப்பற்றல் உள்ளிட்ட நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், இவ்வருடத்தின் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் இதுவரையில் 601 சட்டவிரோத துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# சம்பிக்கவின் ஊடக செயலருக்கு சி.ஐ.டியினர் அழைப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, அவரது பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ மற்றும் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன ஆகியோர் இருக்கும் புகைப்படம் ஒன்றை சமூகவலைத்தளங்களில் வெளியிட்டமை தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் ஊடக செயலாளராக கடமையாற்றிய தனுஷ்க ராமநாயக்கவை குற்றவியல் விசாரணை திணைக்களம் அழைத்துள்ளது.

இந்த புகைப்படத்தை தான் போலியாக தயாரிக்கவில்லை எனவும் ஒருவர் பதிவேற்றம் செய்திருந்த புகைப்படத்தை மறு பதிவேற்றம் செய்ததாகவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)



# இலங்கையில் மஞ்சள் இறக்குமதித் தடையினால் தமிழகத்தில் மஞ்சள் விலை சடுதியாக வீழ்ச்சி

## ஏற்றுமதிக்கு அனுமதி கோருகிறார் ராமதாஸ்

(சென்னை)

மஞ்சள் இறக்குமதி தடையை நீக்குமாறு, இலங்கையை இந்திய மத்திய மற்றும் மாநில அரசுகள் வலியுறுத்த வேண்டும் என பா.ம.க.நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக ராமதாஸ் கடந்ததிங்கட்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறியுள்ளதாவது, "கொரோனா உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் ஏற்றுமதி வாய்ப்புகள் குறைந்ததையடுத்து, ஈரோடு மஞ்சள் சந்தையில் மஞ்சள் விலை கடுமையான வீழ்ச்சி அடைந்துள்ளது.

இதனால் மஞ்சள் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மஞ்சள் ஏற்றுமதிக்கு புத்துயிரூட்டி, விவசாயிகள் கவலையைப் போக்க மத்திய, மாநில அரசுகள் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாதது மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது.

இந்திய மஞ்சளுக்கு மருத்துவத் தன்மையும், நோய் எதிர்ப்பு சக்தியும் இருப்பதால், அதற்கு உலகம் முழுவதும் அமோக வரவேற்பு உள்ளது.

இந்தியாவின் புகழ்பெற்ற மஞ்சள் சந்தையாக ஈரோடு திகழ்வதால், தமிழகத்தில் சேலம், ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்களில் விளைவிக்கப்படும் மஞ்சள் உலகின் பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவது வழக்கம் ஆகும்.

தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா பாதிப்பு காரணமாக ஏற்றுமதி குறைந்திருப்பது மஞ்சள் விலை வீழ்ச்சிக்கு ஒரு காரணம் என்றாலும்கூட, இலங்கையில் மஞ்சள் இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள தடை தான் விற்பனை குறைவுக்கும் விலை வீழ்ச்சிக்கும் முதன்மைக் காரணம்.

ஆனால், மஞ்சள் உற்பத்தியில் தற்சார்பு அடைய வேண்டும் என்பதற்காக இந்தியா உள்ளிட்ட எந்த நாட்டிலிருந்தும் மஞ்சள் இறக்குமதி செய்ய இலங்கை தடை விதித்திருக்கிறது.

அதனால், இலங்கைக்கான மஞ்சள் ஏற்றுமதி முற்றிலுமாக முடங்கியது தான் மஞ்சள் விலை வீழ்ச்சி அடைந்ததற்கு முக்கிய காரணம் எனக் கூறப்படுகிறது.

இலங்கையின் இந்த முடிவு யாருக்கும் நன்மை பயக்கவில்லை. மாறாக, இரு தரப்புக்கும் பாதிப்புகளே ஏற்பட்டிருக்கின்றன. ஒருபுறம் ஈரோடு சந்தையில் விலை வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், மறுபுறம் இலங்கையில் மஞ்சளின் விலை வரலாறு காணாத அளவுக்கு அதிகரித்திருக்கிறது.

மேலும், மஞ்சள் மற்றும் தங்கக் கடத்தல்காரர்கள் மட்டும் தான் இந்தத் தடையால் பயனடைந்துள்ளனர். எனவே குறித்த தடை நீக்கப்பட்டால், இலங்கையில் மஞ்சளின் விலை எட்டில் ஒரு பங்காக குறையும்.

எனவே,இந்த விடயத்தில் இந்திய மத்திய, மாநில அரசுகள் தலையிட்டு தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்காக மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்த வேண்டும்" என அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

# ஆயுதப் போரைக் கைவிடுங்கள்
# கொரோனாவுடன் போராடுங்கள்
## உலகிற்கு ஐ.நா.அழைப்பு


**(ஜெனிவா)**
**சர்வதேச அளவில் இடம்பெற்றுவரும் போர்களை நிறுத்தி, துப்பாக்கிகளை மௌனிக்கச் செய்யுமாறு ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளர் அந்தோனியோ குட்டரஸ் அழைப்பு விடுத்துள்ளார்.**

ஆயுதப் போருக்குப் பதிலாக கொரோனா வைரஸ் தொற்றுநோய்க்கு எதிரான போராட்டத்தில் ஒன்றுபடுமாறு போரிடும் தரப்பினரை அவர் வலியுறுத்தியுள்ளார்.

உலக உணவுத் திட்ட நிகழ்வொன்றில் பேசிய அவர், தொற்று நோய்க்கு மத்தியில் உலகில் ஏராளமானவர்கள் பட்டினியை எதிர்நோக்கியுள்ளனர் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

உலகில் அமைதியை ஏற்படுத்துவதில் உணவுப் பாதுகாப்பு முக்கிய பங்காற்றுகிறது.

இந்நிலையில் அர்ப்பணிப்பு, தாராள மனப்பான்மையுடன் ஆபத்துக்களையும் கடந்து மக்களின் அன்றாட உணவுக்கு வழி செய்யும் மகத்தான



பணியை உலக உணவுத் திட்டம் முன்னெடுத்து வருவதாகவும் பாராட்டுத் தெரிவித்தார்.

பல இடங்களில் துப்பாக்கிகள், குண்டுகளுக்கு மத்தியில் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு உதவுவதில் உலக உணவுத் திட்டத்தின் பங்கு அளப்பரியது என அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# வரவு - செலவுத் திட்டத்தில் என்ன உள்ளதோ தெரியவில்லை
## இராதாகிருஷ்ணன் சாடல்

(கொழும்பு)

சிறுதோட்டங்கள், கைத்தொழில் பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான எதுவும் இந்த வரவு- செலவுத் திட்டத்தில் இல்லை. அதில், என்ன இருக்கிறதென எனக்குத் தெரியவில்லை என நுவரெலியா மாவட்ட பாராளுமன்றம் உறுப்பினர் இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

சபையில் நேற்று நடைபெற்ற 2021ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"கடந்த அரசாங்கத்தின் போது, 7 பேர்ச் காணி கொடுக்கப்பட்டுள்ளது. வீடுகளும் கட்டிக்கொடுக்கப்பட்டன. இம்முறை பட்ஜெட்டில், முழு நாட்டுக்குமான வீடமைப்புத் திட்டம் பற்றி பேசப்பட்டது. 1,000 ரூபாய் பேசப்பட்டது. அதனோடு முடிந்துவிட்டது.

"இந்த 1,000 ரூபாய் முன்மொழிவு இன்றைக்கு ஐந்து வருடங்களுக்கு முன்னர் 2015 ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட யோசனையாகும். 1,000 ரூபாய் தொடர்பில் 22 கம்பனிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும்.

அதன் பின்னர் தான் தீர்மானத்தை எடுக்கவேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# மலபார் பயிற்சி ஆரம்பம்

(கொழும்பு)

இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளின் கடற்படைகள் பங்கேற்கும் 2 ஆம் கட்ட மலபார் போர்ப்பயிற்சி வடக்கு அரபிக்கடல் பகுதியில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

இந்தப் போர்ப்பயிற்சி எதிர்வரும் 3 நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

இதில் இந்திய கடற்படையின் விமானம் தாங்கி போர்க்கப்பலான விக்ரமாதித்யா அமெரிக்க விமானம் தாங்கி போர்க்கப்பலான நிமிட்ஸ் ஆகியவற்றை மையப்படுத்தி ஏனைய



நாடுகளின் போர்க்கப்பல்கள் பயிற்சியில் ஈடுபடவுள்ளன்.

கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்களைத் தாக்குவது தொடர்பான அதிநவீன பயிற்சிகளும் இதில் இடம் பெறவுள்ளன. (ஜ-4)


1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 29.12.1940
மறைவு 01.12.2019

அமரர். திருமதி
விநாயகமூர்த்தி புவனேஸ்வரி
திதி: பூர்வபக்க பஞ்சமி
19.11.2020


வல்லிபுரம் வழி வையகமதிலுத்து
வாண்மை பலவெய்தி வரலாறு கூற
கல்வியது கற்பித்து காது வழி இன்னும்
வாய்ச்சொல் நாமமது வரம்பு வழிவர
புவனமாய் வந்துதித்த புவனேஸ்வரித் தாயாவாள்
தனபூமி தனங்கிளப்பதில்
இன்றும் இவளுண்டு நீங்கா நினைவலையாய்
ஆண்டொன்று ஆனாலும் அழியாமல் ஆர்ப்பரிக்க
ஆண்டு ஒன்று நினைவலைகளுடன்
பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் உற்றார் உறவினர்கள்.

1ம் கட்டை,
கச்சாய் வீதி,
சாவகச்சேரி

குடும்பத்தினர்.

(C-718)


# மாற்றுத்திறனாளி மாணவன் சாதனை




(திருமலை)

இவ்வருடம் வெளியான ஐந்தாம் தர புலமைப்பரிசில் பெறுபேற்றின் படி கிண்ணியா வலயக் கல்வி பிரிவுக்குட்பட்ட பாடசாலையொன்றில் கல்வி பயிலும் விசேட தேவையுடைய மாணவனொருவர் சாதனை படைத்துள்ளார்.

முஹம்மது சமீர் முஹம்மது உசாமா எனும் மாணவன் 158 புள்ளிகளை பெற்று தனக்கும் தனது பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளார். (ஜ-4)

# கொவிட்-19 ஒழிப்பிற்கான பாரம்பரிய மருந்து விநியோகம்



(ஏறாவூர்)

கிழக்கு மாகாணத்தில் கொவிட் -19 நோயாளிகளுக்கு வழங்கப்படவுள்ள சிறப்பு பாரம்பரிய மருந்து நேற்று மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தின் ஆதரவின் கீழ் விநியோகிக்கப்பட்டது. கிழக்கு மாகாணத்தில் கொவிட் தொற்று நோயால் தற்போது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளிகளின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க இந்த மருந்துகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்-2020

**யா/ வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயம்**

கு. விதுஷாந்-194,வ.அபிராமி-184,கே.துஷாரா-181,உ.பிறேம்காந்-180, ப.ட்ர்ஷிகா-180,செ.பிரசாயினி-173,உ.பிரவீனா-171,வி.அபிசேகா-168,பு.கிஷானா-162, ஸ்ரீ.அபிஷா-162.

**யா/காரைநகர் வலந்தலை வடக்கு அ.மி.த.க. வித்தியாலயம்**

சி.டனோஜன்-172,சி.அபிநயா-163.

**கிளி/சோரன்பற்று சி.சி.த.க. பாடசாலை**

நி-பம்சிகா-187

**யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை**

ர.கபிலன்-181, பா.அபிநயன்-177, கா.யதுசாந்-170, கெ.சுவேத்தா-166, லி.சந்தோசி-163,செ.சோபிகன்-162, யோ.அனிஸ்பெகின்-161.

**யா/ மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலை**

து.யஸ்மிகா-186,சி.தாரங்கன்-185,ஆ.அஸ்வினி-183,ஜெ.கரனிகா-179,மு.மதுஷனா-178,சு.கிஷான்-173,க.கேசமன்-171,அ.ஆர்த்திகன்-169,வி.அஸ்வினி-167,க.சிவானுஜன்-164,கா.தர்மீகன்-163,அ.ஆகாஸ்-163, சு.பிரகாசனா-162.

**யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்**

த.கவிநயன்-191, மு.பிரித்திகா-162.

**யா/ மண்டைதீவு மகா வித்தியாலயம்**

ச.கிருத்திஜன்-181

**யா/மண்டைதீவு றோ.க. வித்தியாலயம்**

ஜெ.ஜெனிஸ்ரலா-166, ப.ஜென்சன்-163.

**மு/அனிஞ்சியன்குளம் தமிழ் மகா வித்தியாலயம்**

பி.பிரணவி-187, பி.கஸ்தூரி-183, எஸ்.லதுர்ஷன்-178, எஸ்.சர்மிளா-174, வி.அக்ஷயன்-171, எம்.நிதர் ஷிகா-168, ஜே.ஜெசிரன்-168, கே. தரணிகா-167, யூ.இந்துஷன்-166, ஜி.பிரஸ்ணவி-166, வி.தனோமிகா-165, ஆர்.மலரிசை-164, எஸ்-நிதர்ஷனா-160, எஸ்.கிரிஷாந்-160.

**யா/சுதுமலை வடக்கு தமிழ் கலவன் வித்தியாலயம்**

ந.சந்துரு-168.

**யா/சென்.பற்றிக்ஸ் கல்லூரி**

ஆர்.நிதீஸ்- 185, ரி.மிதுன்-184,எம்.சறோன்-183,ஏ.ஜெ.அடிஸ்ரன்-183, ரி.சயந்தன்-182,எஸ்.பவிஸன்-178, ஜே.பி.ஜெருசன்-177,எம்.சகான்-175, எஸ்.ரெலோஜன்-175,ஏ.விக்மிலன்-174,ஜே.ஜெசன்-173, சீ.எபினேஷ்-173, ஆர்.சாருஜன்-172, ரி.தனுஷியன்-171, என்.டனிஷன்-170, பி.நகுசாந்த்-169, ஜே.யூட்செறோன்-167, நி.நெதன்ஷான்-166,என்.நிரோான்-165, பி.ஹஸ்ரின்-165, ஆர்.கபிஷன்-164,ஜே.பிரவிந்த் 163, ஜே.ஹரிஸ்மன்- 162, ஜே. கே.எல். ஜேசேரன்-162, எஸ். ஜர்சிகன்-162.

**யா/புற்றளை மகா வித்தியாலயம்**

ரி.தேனுகாஷ்-186,எஸ்.சுலக்ஷன்-184,கே.கபிலன்-182,ஆர்.அபிஷேக்-181,எஸ்.டி.ஜோசுவா-177,எஸ்.டி. கலிப்-172,கே.அஸ்விதா-171,எஸ்.சுஜன்-170,ரி.சந்நிதன்-169,என்.ஷியாமிகா-165,ஜி.நிலாஜனன்-165,பி.பிரவீனா-164,ஆர். கோஜிதா-163,எஸ்.சுவிர்னா-162, பி. பிரியந்தன்-160.

**யா/ இந்து ஆரம்பப் பாடசாலை**

சீ.ஆர்வலன்-195, பி.பிரநித்-194, யூ.அபினாஸ்-193,கே.பிரவீனன்-192, கே.பிரதீப்-192,ஜே.ஜஸ்விந்தன்-191, ஜே.வர்னுஜா-191,வி.கவின்-188, எஸ்.சிவசாஜினி-188,வி.திவ்யா-187, எம்.நிதுஷன்-187, எம்.பிரகவி-187, ரி.வர்ஷிகன்-187,வி.சதுஷிகா-186, ஏ.அஜய்-186, என்.நிஷாலன்-185, கே.மதுஷனா-185, ஜி.ஆர்விந்த்-185

வி.கஜானி-185, பி. அபுசன்-185, ரி.சுவேதா-184, ஜே. அபிஷேகா-184, எஸ்.அட்சஜன்-184, ஆர்.பவதர்ஷன்-184, எஸ்.கலாத்மிகா-184, ஏ.அனுராகன்-183,எஸ்.ஆஷிக்-183, பி.சாகீத்தியன்-183, ரி.அகீபன்-183, ரி.லக்ஷாஜினி-183, எஸ்.அதீரதன்-182,எஸ்.டிஷானிகா-182.

லி.பவிஷ்யா-182,யூ.ஆரபி-182, பி.அபிதரன்-182, எஸ்.அர்ச்சயா-182, எஸ்.தருண்-181, வை.அக்ஷயா-181, எஸ்.சிவகஜீசன்-181,பி.தொகென்யா-181, ரி.அஞ்சனா-181, எம்.தனுஷ்கரன்-181, எஸ்.அபினுஷன்-180,வி.நிபுஷன்-180,எம். பிரகதி-180,பி.ஜனுக்ஷன்-180, என். திருவதீஸ்வர்-180.

ஐ.கானநிலவன்-179, வி.ஜஸ்னுகா-178, யூ.பிரியங்கவி-178, ஆர்.இந்துஜா-178, எஸ்.ஷஷ்ஷாங்கி-178, எஸ். யுவர்ஷன்-178, பி.ஹர்சினி-178, ரி.அஸ்வின்ராம்-178, எம்.பாத்திமா ஜெஷா-178, கே.விஹாஸ்-177 .பி.நினோஜ்-177, பி.ஆரூரன்-177, எஸ்.தரணிகா-176, ஜே.அக்ஷயன்-176,கே.ஜெய்சன்-176, வி.மாதங்கி-176,கே.சஸ்விகா-176, ஆர்.இலக்கியா-175, ரி.தர் ஷிகன்-175, வி.நிந்துஷன்-175, எஸ்.ஹரிணி-175, ஐ.மதுஷிகா-175, எல்.றோகித்-174, ஏ.அனந்திதா-174, ஜி.தனுஷ் ரன்-174.எஸ். காவியன்-174, ஆர்.தேருஜா-174, எல்.அக் ஷரா-174, எஸ்.தீபனா-174, எஸ். அர்ஜுன்-173, எல்.அதுர்ஷன்-173, வி.பவிஷனா-173,கே.திஷானன்-173,கே.கேதினி-172, எல்.வேணு ஜன்-171,எஸ்.இலக்கியா-171,ஜே. பபிசாந்த்- 171, என்.யதுசனன்-171, ஜே.லக்ஷரா-171, ஐ.கிஷோன்-171, ஜே.அபிசுதன்-171, பி.பிரகீஷன்-171

எம்.சிருஷ்ரிகா-171,வி.அக்ஷயா-171, என். சங்கீத்-170, எஸ்.நஜிகா-170, என்.சஹானா-170, ஆர்.ஹேமாங்கி-170, ஜி.செந்துாரன்-170, யூ.மாதுமை-170, என்.சோபனா-170, கே.கினிஷா-169, பி.சாயீசன்-169, ஆர்.சாய்விழி-169, எஸ். பவிசன்-169, ஏ.அபர்ணிகா-169, எஸ்.கோபிகா-169, எஸ். மதுஷா-168, கே.ஆகீஷன்-168, என்.கபிக்ஷன்-168, எம்.சைந்தவி-168, எஸ்.மிதுர்ஷிகா-168,கே.சானுஜன்-167, கே.வர்ஷாஜினி-167, கே.துவாகரன்-167.ரி.அஜீபன்-167, ரி.அபிஷேக்-167,ஜே.லக்ஷிகா-166, என்.சமீக்ஷிகா-166, எஸ்.ஹரிஸ்மகித்தரா-166,ரி.தபீஷன்-165,கே.நதிஷனா-165,ஆர்.வசீகரன்-165, எம். கோபிநாத்-165 பி.கோகுல்நாத்-165, என்.தர் வீஸ்-165, ஆர்.சஜீவ்-165, எஸ்.மதுஷன்-164, எஸ்.ஜீவன்சங்கர்-164, வி.அபின் ஷா-164,எஸ்.கௌதமி-164, ஜி.யாதவன்-164, ஜே.லுசித்யன்-164, பி.நஸ்மிதன்-163, ஜே.ரிஷாங்கன்-163, ஜே.அபிநயன்-163,எம்.செந்துாரன்-163, ஏ.பிறின்சிறோன்-163, ஏ.அபிநயா-162, வை.சுஜீவன்-161, எஸ். கர்ஸ்மியா-161, சீ.அஸ்விகா-161, ஜி.சதுர்ஷ்ரிக்ன்-161,எஸ்.மாலவன்-161, கே.அஸ்மிதா-160, ஆர். ஜெயமிதா-160, எஸ்.தபர்ணா-160.

## வீதி புனரமைக்கக் கோரிக்கை



(குப்பிழான்)

உரும்பிராய் வடக்கில் அமைந்துள்ள கற்பகப் பிள்ளையார் கோவில் வீதி பல வருடங்களாகத் திருத்தப்படாமையால் மழை காலங்களில் வெள்ளநீர் அதிகளவில் தேங்கி நிற்கிறது.

இதனால், குறித்த வீதி ஊடாகப் பயணிக்கும் பல்வேறு தரப்பினரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்ற னர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அக்கறை எடுத்து வீதியைப் புனரமைப்பு செய்ய வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-18)

## சுபீட்சத்தின் நோக்கு திட்டம் ஆரம்ப நிகழ்வு நாவற்குழியில்

(சாவகச்சேரி)

ஜனாதிபதியின் "சுபீட்சத்தின் நோக்கு" திட்டத்தின் ஊடாக யாழ்.மாவட்டத்தின் தென்மராட்சி-நாவற்குழி பகுதியில் வீடமைப்புத் திட்டத்திற்கான ஆரம்ப நிகழ்வு நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.

ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கும் நூறு வீடுகளை அமைக்கும் சியபத்த வீடமைப்புத் திட்டத்தின் ஊடாகவே யாழ்ப்பாண தேர்தல் தொகுதிக்கு உட்பட்ட நாவற்குழி பகுதியில் வீடமைப்பிற்கான ஆரம்ப நிகழ்வு இடம் பெற்றது. இவ் ஆரம்ப நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன்,யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதனின் செயலாளர் வின்சேந்திரராஜா, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிரதிநிதி, தேசிய வீடமைப்புத் திணைக்கள



அதிகாரிகள், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர்கள், தென்மராட்சி பிரதேச செயலர் உஷா சுபலிங்கம், சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.குறித்த திட்டத்தினை அரசாங்க அதிபர் மற்றும் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் செயலாளர் ஆகியோர் இணைந்து ஆரம்பித்து வைத்தனர். (5-4-30-33)

# மீள் கேள்வி அறிவித்தல் - 2021
# காரைநகர் பிரதேச சபை

**(மீன் சந்தைகள், கோழி இறைச்சிக்கடை, பாரம்பரிய உணவகம், அரை நிரந்தரக்கடை, ஆண்கள்/பெண்களுக்கான பொதுக்குளியலறை மற்றும் மலசலகூடம்)**

யாழ்.மாவட்ட நிரந்தர வதிவிடத்தைக்கொண்ட பொதுமக்களிடமிருந்து 01.01.2021 முதல் 31.12.2021 வரை காரைநகர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், கோழி இறைச்சிக்கடை, பாரம்பரிய உணவகம், அரை நிரந்தரக்கடை, ஆண்கள் / பெண்களுக்கான பொதுக்குளியலறை மற்றும் மலசல கூடம் என்பவற்றிற்கு குத்தகைக்கு விடுவதற்கான பகிரங்க மீள் கேள்வி அறிவித்தல்.

- கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி :- 19.11.2020 - 03.12.2020 வரை
- கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி:- 04.12.2020 பி.ப. 1.55 மணிவரை
- கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 04.12.2020 பி.ப. 2.00 மணிக்கு
- கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் :- தலைமை அலுவலகம், காரைநகர் பிரதேச சபை

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை தவிசாளர், காரைநகர் பிரதேச சபை என்ற முகவரிக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல்மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும்.

❖ மீளளிக்கப்படாத படிவக்கட்டணம் மற்றும் மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் என்பவற்றை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். தேசிய அடையாள அட்டை, அதன் நிழற்படப் பிரதி மற்றும் கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிடச்சான்றிதழ் என்பவற்றுடன் விண்ணப்பதாரி நேரடியாக சமுகமளிக்க வேண்டும்.

❖ ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாததுடன் கேள்விக்காரரின் பெயர்" தவறுநர்" பட்டியலில் சேர்க்கப்படும்.

❖ கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.

❖ தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியை 14.12.2020 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ளல் வேண்டும்.

❖ கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதி ஒருவரோ சமுகமளிக்கலாம்.

❖ மீன் சந்தைகளை குத்தகைக்கு எடுப்பவர்கள் வியாபாரநோக்கத்திற்கு கொண்டு வரும் மீன் உட்பட கடலுணவு வகைகளிற்கு கிலோ ஒன்றிற்கு ரூபா 5.00 உம் வியாபாரிகளுக்கான இடவரி தொடர்பில் (மீன் சந்தை, மீன் வெட்டும் இடம்) கூடு ஒன்றிற்கு ரூபா 30.00 உம் துவிச்சக்கரவண்டி பாதுகாப்புக்கட்டணம் ரூபா 5.00 உம் மோட்டார் சைக்கிள் பாதுகாப்புக்கட்டணம் ரூபா 10.00 இனையும் அறவிடலாம். மேலதிகமாக எவ்விதக்கட்டணங்களும் அறவிட முடியாது.

❖ மீன் சந்தை சுற்றாடலில் இருந்து **500m** சுற்றுவட்டாரத்தில் மீன் விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

❖ மீன் சந்தையை குத்தகைக்கு பெறுபவர்கள் துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் பாதுகாப்புக்கட்டணம் என்ற சிட்டையை கொடுத்து அதற்குரிய பணத்தை அறவிட முடியும். சந்தைக்கு வெளியே எந்த ஒரு கட்டணத்தையும் அறவிட முடியாது.

❖ கேள்விதாரர் காலத்திற்க் காலம் அரசினால் வழங்கப்படும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

❖ உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுநராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.

❖ இறைச்சிக்கடை மற்றும் பாரம்பரிய உணவகத்திற்கான கேள்வியில் தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் மேலதிகமாக வருடாந்த வாடகையில் 1/3 பகுதியை 14.12.2020 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும்.

❖ சித்தி பெறாத கேள்விதாரர்களின் கேள்வி வைப்புப்பணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கப்படும்.

❖ மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

2021 ஆம் ஆண்டுக்கான சந்தைகள், இறைச்சிக்கடை, மற்றும் ஏனையவற்றிற்கான குத்தகை அட்டவணை

| தொ. இல | விபரம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | மாத வாடகை | கேள்விப் பிணைப் பணம் மீளளிக்கக் கூடியது | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக்கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | ஆலடி மீன் சந்தை (துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையங்களுடன்) | 244,000.00 | 0.00 | 2,000.00 | 500.00 |
| 02 | வலந்தலை மீன்சந்தை (துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையங்களுடன்) | 48,000.00 | 0.00 | 1,000.00 | 500.0 |
| 03 | வலந்தலை மீன் சந்தை கோழி இறைச்சிக்கடை | 45,000.00 | 1,000.00 | 2,000.00 | 500.00 |
| 04 | கசூரினா சுற்றுலா மையத்திலுள்ள பாரம்பரிய உணவகம் | 44,400.00 | 3,000.00 | 2,000.00 | 500.00 |
| 05 | கசூரினா சுற்றுலா மையத்திலுள்ள ஆண்கள் பொதுக்குளியலறை மற்றும் மலசலகூடம் | 170,000.00 | 0.00 | 2,000.00 | 500.00 |
| 06 | கசூரினா சுற்றுலா மையத்திலுள்ள பெண்கள் பொதுக்குளியலறை மற்றும் மலசலகூடம் | 138,000.00 | 0.00 | 2,000.00 | 500.00 |
| 07 | கசூரினா சுற்றுலா மையத்திலுள்ள அரை நிரந்தரக்கடை | 24,000.00 | 0.00 | 2,000.00 | 500.00 |

**தவிசாளர், பிரதேச சபை, காரைநகர்.** (C-718)

# சேவைநலன் பாராட்டும் பிறந்த தின வாழ்த்துகளும்



## திருமதி. கலைவாணி பிருதிவிராஜ்

(யா/இளையதம்பி இந்து வித்தியாலய ஆசிரியர்)

**19.11.2020**

**கல்வித் தெய்வத்தின் நாமம் கொண்டு**
**காலமெல்லாம் நின்னரிய பணிகள் புரிந்து**
**மழலைகளின் உள்ளங்களில் நீங்கா இடம்பிடித்து**
**அகவை ஐம்பத்து நான்கு காணும் இந்நாளில்**
**ஓய்வு பெறும் எம் அன்பான ஆசிரியையே**
**நீங்கள்உங்கள் உறவுகளுடன் என்றும்**
**வளமாக வாழ உளமார வாழ்த்துகிறோம்.**

**சேவை விபரம்**

1992 யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்

2010 யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை

2018 – 2020.11.18 யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்.

வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்
யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்,
வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்.


(4665)

# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>கி.பா: செவ் 8 இல் உயரம்: 6'2"<br>தகைமை/தொழில்: மென்பொருள் பொறியியலாளர் நியூசிலாந்தில் வேலை செய்கின்றார்<br>எதிர்பார்ப்பு: உள்நாட்டு படித்த பெண்<br>தொ.இ: **B/11386** | பிறப்பு: 1980 இந்து (சைவபோசனம்)<br>நட்சத்திரம்: சுவாதி 3<br>கி.பா: 28 1/2 செவ் 2 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: **M.B.B.S.Doctor**<br>எதிர்பார்ப்பு: வைத்தியர், பொறியியலாளர், வங்கி உத்தியோகத்தர் போன்றோர்<br>தொ.இ: **G/1758** |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 4<br>கி.பா: 10 3/4 செவ் 5 இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. கடை உரிமையாளரும் ஒப்பந்தகாரரும்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: **B/11389** | பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 24 1/2 செவ் 9 இல் உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: ஆசிரியை (அரச)<br>எதிர்பார்ப்பு: தகுந்த மணமகன்<br>தொ.இ: **G/1767** |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1<br>கி.பா: செவ் 11 இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. அரச உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகமுள்ள பெண்<br>தொ.இ: **B/11390** | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 3<br>கி.பா: 34 1/4 செவ் 3 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. தனியார் வேலை<br>எதிர்பார்ப்பு: தகுந்த மணமகன்<br>தொ.இ: **G/1793** |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 3<br>கி.பா: 43 செவ் 9 இல் உயரம்:**160cm**<br>தகைமை/தொழில்: பட்டதாரி பொறியியலாளர்- சிங்கப்பூர் (தனியார்)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரச, தனியார் உத்தியோகமுள்ள பெண்<br>தொ.இ: **B/11391** | பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 3<br>கி.பா: 35 3/4 சூரி. செவ் 2 இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: பட்டதாரி ஆசிரியை (அரச)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி தகுந்த மணமகன்<br>தொ.இ: **G/1799** |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**

# கிணற்றில் இருந்து வெடிபொருள் மீட்பு



(நெளுக்குளம்)

வவுனியா தம்பனைச்சோலைப் பகுதியில் கிணற்றில் இருந்து வெடிபொருட்களை பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர். குறித்த பகுதியில் உள்ள தனியார் காணியில் அமைந்துள்ள கிணற்றினை நீண்ட நாட்களிற்கு பின்னர் அதன் உரிமையாளர் துப்புரவு செய்துள்ளார்.

இதன்போது சேற்றில் புதைந்திருந்த நிலையில் "செல்" ஒன்று இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா பொலிஸார் "செல்"லை மீட்டுள்ளதுடன் குறித்த கிணற்றினுள் மேலும் வெடிபொருட்கள் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் நீதிமன்ற உத்தரவுடன் தேடுதல் நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4-299)

# முப்படைகளைக் கொண்டு அடக்கி நினைவேந்தலைத் தடுப்பதென்பது இன நல்லிணக்கமாக அமையாது

(குப்பிழான்)

நினைவுகூருவது என்பது ஒவ்வொரு தனிமனிதனுடைய, சமுதாயத்தினுடைய, ஒரு இனத்தினுடைய அடிப்படை உரிமை. எனவே, நினைவுகூருவதற்கு நாங்கள் யாருடைய அனுமதியையும் பெற வேண்டிய அவசியமில்லை.

குறிப்பாக எங்கள் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தங்கள் இன்னுயிர்களைத் தியாகம் செய்த மாவீரர்கள், வீர மறவர்களை நினைவுகூருவதற்கு அவர்களுடைய பெற்றோர்கள், வாழ்க்கைத் துணைமார் மற்றும் பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்களுக்கு மாத்திரமல்லாமல் ஒவ்வொரு தமிழருக்கும் உரிமையுண்டு எனத் தமிழ்த்தேசியக் கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள தமிழ்த்தேசியக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மாவீரர் நாள் அனுஷ்டிப்பதற்கு இலங்கை அரசாங்கம் தடை விதித்துள்ளமை தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெறுமனே உயிரிழந்தவர்களின் உறவினர்கள் மாத்திரம் தான் இந்த விடயத்தில் அக்கறை செலுத்த வேண்டுமென்றில்லை. தமிழர்களான நாங்கள் உரிமை பெற்ற இனமாக வாழப் போகின்றோமா? இல்லையா? என்பதற்கான ஒரு அசிட் பரிசோதனை எங்கள் முன்னாலே வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரீட்சையில் நாங்கள் தோற்போமாயின் எதிர்காலத்தில் எந்தவிடயத்தையும் எங்கள் விடுதலை சார்ந்து கோருவதற்கான தார்மீக உரிமையை இழந்தவர்காளாவோம்.

இன்று (நேற்று) பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் பிறந்த நாள், அதேநேரம் ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்று இன்றுடன் (நேற்று) ஒரு வருடமாகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் மாவீரர் நாள் அனுஷ்டிப்பதைத் தடுக்கக் கூடாது என்ற தீர்மானத்தை எடுக்க வேண்டுமென அரசாங்கத்திடம் கேட்கின்றோம்.

அவ்வாறானதொரு தீர்மானத்தை எடுப்பதன் மூலம் தான் தேசிய நல்லிணக்கத்தையோ, இன ஒற்றுமையையோ கட்டியெழுப்ப முடியும். இதனை விடுத்து மாவீரர் நாள் அனுஷ்டிப்பதை முப்படைகள், பொலிஸார், புலனாய்வாளர்களைப் பாவித்து அச்சுறுத்துவது தவறானதொரு நடவடிக்கை.

கடந்த வருடம் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்று எட்டு நாட்களில் மாவீரர் நாள் நிகழ்வுகள் இடம்பெற்ற போது அதனை அரசாங்கம் தடுக்க முற்படவில்லை.

எனவே, இம்முறையும் மாவீரர் நாள் அனுஷ்டிப்பதைத்




தடுக்காதிருப்பது எங்கள் மக்கள் மத்தியில் மாற்றத்திற்கான ஆரம்பமாக அமையும்.

இல்லாவிடில் தொடர்ந்தும் இனங்களுக்கிடையில் கசப்பும் பிரிவினையும் வேதனையும் தான் மிஞ்சும். இது இலங்கைத் தீவின் எதிர்காலத்திற்குப் பொருத்தமாகவும் சாதகமாகவும் அமையாது என்பதை இலங்கை ஆட்சியாளர்களுக்கு நாங்கள் உறுதிபடத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாவீரர் நாளன்று மாவீரர் துயிலுமில்லங்களுக்கு வர முடியாத மக்கள் கார்த்திகை விளக்கீட்டுக்கும் கிறிஸ்மஸ் பண்டிகைக்கும் உங்கள் வீடுகளில் தீபம் ஏற்றுவது போன்று தீபம் ஏற்றுங்கள். அவ்வாறு செய்வது நிச்சயமாக மாவீரர்களுக்கான வீர வணக்க நிகழ்வுகளாக அமையும். எனவே, இந்த வருட மாவீரர் நாளை வெற்றிகரமாகச் செய்து முடிப்பதற்குத் தமிழ்த்தேசியத்தை நேசிக்கும் அனைத்துக் கட்சிகளும் அமைப்புக்களும் கட்சி பேதங்களைக் கடந்து ஒன்றுபட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4-18-33)

# மடு கல்வி வலயத்தில்

## சாதனை படைத்த மாணவி கௌரவிப்பு



(மன்னார்)

வெளியாகியுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மடு கல்வி வலயத்தில் அதிகூடிய புள்ளியை பெற்று சாதனை படைத்த மாணவி நேற்று கௌரவிக்கப்பட்டார்.

மடு கல்வி வலயத்தில் ஆண்டான்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மாணவி விக்ரர் சாள்ஸ் பிரதிக்சா தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 181 புள்ளிகளை பெற்றுள்ளார்.

இம்மாணவிக்கு மடு வலயக் கல்வி பணிப்பாளர் கே.சத்தியபாலன் பதக்கம் மற்றும் பரிசில் வழங்கி கௌரவித்தார். இந்நிகழ்வில் மடு வலயக்கல்வி திணைக்கள அதிகாரிகள், பாடசாலை அதிபர், ஆசிரியர் ஆகியோர் கலந்து கொண்டனர்.(5-4-285)

# மன்னாரில் மரநடுகை





(மன்னார்)

கிளிநொச்சி மக்களின் ஆதரவுடன் மன்னார்-யாழ்.பிரதான வீதி,மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நாயாற்று வெளி பகுதியில் மரக்கன்றுகள் நடும் நிகழ்வு நேற்று புதன்கிழமை இடம்பெற்றது. "லக்சுமி கரங்களின் கற்பகா திட்டத்திற்கு" அமைவாக சர்வமத தலைவர்களின் ஆசியுடன் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.கேதீஸ்வரன் மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர். குறித்த பகுதியில் 10 ஆயிரம் பனை விதைகள், 150 நாவல் மரங்கள், ஏனைய மரங்கள் 150 ஆகியவை நடுகை செய்யும் வகையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது திணைக்கள தலைவர்கள், அரச, அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நாட்டி வைத்தமை குறிப்பிடத்தக்கது.(5-4-285)

# பரீட்சை முடிவுகளை விரைந்து

## வெளியிடுமாறு துணைவேந்தர் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடத்தப்படும் வெளிவாரிக் கற்கைகளுக்கான பரீட்சை முடிவுகளை விரைந்து வெளியிடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பணித்துள்ளார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நடந்த வணிகமாணி (பழைய பாடத்திட்ட) பரீட்சை முடிவுகள் தாமதமாவது குறித்து பரீட்சார்த்திகளினால் துணைவேந்தரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதை அடுத்து நேற்று முன்தினம் இடம்பெற்ற பல்கலைக்கழக மூதவைக் கூட்டத்தில் துணைவேந்தர் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் பணிப்பாளரிடம் கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பில் பரீட்சை முடிவுகளை வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் பற்றி பணிப்பாளர் மற்றும் கற்கை நெறி இணைப்பாளர் ஆகியோர் விளக்கமளித்தனர்.

உள்வாரியாக நடத்தப்படும் பரீட்சைகளின் முடிவுகளை இரண்டு மாத காலத்தினுள் கையளிப்பதற்கான பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளது. அதேபோலவே வெளிவாரிப் பரீட்சை முடிவுகளையும் வெளியிட விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று துணைவேந்தர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.(5-4-33)

# நிர்வாகத் தெரிவு

(அளவெட்டி)

யாழ்ப்பாணம் கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்திற்கு புதிய நிர்வாகிகள் தெரிவு நேற்று புதன்கிழமை சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் தலைவராக செ.செல்வராஜா, உப தலைவராக த. தங்கதுரை, செயலாளராக செ. உதயகுமார் ஆகியோரும் நிர்வாக உறுப்பினர்களாக த.ரவிச்சந்திரன், க.கனகரத்தினம், ந.ஜெனிஸ்ரன். த. மோகனதாஸ், மோ.மன்றோ பவிரோஸ்ரலின் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (5-4-110)

# இராசிபலன்

19.11.2020
கார்த்திகை 04, வியாழக்கிழமை
பஞ்சமி பின்னிரவு 3.21 மணிவரை
பூராடம் பிற்பகல் 3.04 மணிவரை
சுபநேரம் 7.39-9.09 மணிவரை
இராகுகாலம் 1.39-3.09 மணிவரை
சந்திராஷ்டமம்:- ரோகினி, மிருகசீரிடம்
ஸ்கந்த பஞ்சமி வளவன்


மேஷம்

ஆரோக்கியத்தில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும், நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பயணங்கள் கைகூடும்.


ரிஷபம்

குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், உறவினர்களிடம் பேசும் போது நிதானம் தேவை.


மிதுனம்

புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு.


கடகம்

உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், மருத்துவச் செலவுகள் குறையும், செய்தொழில் மேன்மையுண்டு.


சிம்மம்

வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.


கன்னி

பெற்றோர் மீது பிரியம் கூடும், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், புதிய நபர்களை சந்திக்கும் வாய்ப்புண்டு.


துலாம்

சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முற்படுவீர்கள்.


விருச்சிகம்

சுபகாரியங்களுக்கு அடித்தளம் அமைப்பீர்கள், தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


தனுசு

சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், போசன சுகமுண்டு, கற்பனை மிகுதியான நாள், எதிர்பாராத காரியமொன்று நடைபெறலாம்.


மகரம்

திட்டமிட்ட காரியமொன்றில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், பயணங்களால் பலனுண்டு, இறைவழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.


கும்பம்

நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், காரிய அனுகூலமுண்டு.


மீனம்

முத்தான வாய்ப்புக்கள் உங்களை நாடி வரலாம், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள்.

உனது பணிக்குத் தேவையற்றதை உதறித்தள்ளிவிடு.

## குணமடைந்தோர் 12,210

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வந்த மேலும் 377 பேர் பூரண குணமடைந்துள்ளதாக தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைவாக நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து இதுவரையில் பூரண குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 12 ஆயிரத்து 210 ஆக அதிகரித்துள்ளது. (ஐ-4)

## கைதிகள் போராட்டம்

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலை கைதிகள் சிலர் நேற்று கூரை மீதேறி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

விளக்கமறியல் சிறையில் வைக்கப்பட்டுள்ள கைதிகள் சிலரே தங்களின் வழக்கு நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு கோரி இவ்வாறு எதிர்ப்பில் ஈடுபட்டதாக சிறைச்சாலைகள் திணைக்களத்தின் நிர்வாக ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

இதன் காரணமாக சிறைச்சாலையின் பாதுகாப்பை மேலும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

## 7 பேர் கைது

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறி செயற்பட்ட குற்றச்சாட்டில் நேற்றுடன் நிறைவடைந்த காலப்பகுதியில் 7 பேர் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப்பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

பாதுகாப்பு முகக்கவசம் மற்றும் சமூக இடைவெளியினை தவிர்த்து செயற்பட்ட குற்றச்சாட்டில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நேற்று புதன்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர்மேலும் தெரிவித்தார். (ஐ-4)

## அதிகரிக்கும் தனிமைப்படுத்தல்கள்

(கொழும்பு)

நாட்டில் இதுவரையில் 28 ஆயிரத்து 472 குடும்பங்களைச் சேர்ந்த 77 ஆயிரத்து 531 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர். இதனையடுத்து, சுகாதாரத் துறையுடன் இணைந்து குறித்த வீடுகளைத் தொடர்ந்தும் கண்காணித்து வருவதாகவும் தெரிவித்தனர்.

இதன் பிரகாரம், சிவில் உடைகளில் பொலிஸ் அதிகாரிகளால் கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என மேலும் தெரிவித்தனர். (ஐ-4)

# கொரோனாவுடன் வாழப்பழகுங்கள்

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

**(கொழும்பு)**

**அடுத்த மூன்றரை வருட காலத்திற்கு கொரோனாவுடன் வாழப்பழகிக்கொள்ள வேண்டும் என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.**



நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில்கொரோனாத் தொற்று பரவலால் மக்கள் தமது இயல்பு வாழ்க்கையை இழந்து அச்சத்தின் மத்தியில் முடங்கியுள்ளனர்.

தினமும் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதோடு, கொரோனா நோயாளிகளின் மரணமும் உயர்வடைந்துள்ளது.

இந்நிலையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

சில காலத்திற்கு வைரஸ் காணப்படும் என்பதால் அதனை எதிர்கொள்வதற்கான தனது அணுகுமுறையை மாற்றும் எனத் தெரிவித்தார். (ஐ-4)

# துமிந்தவுக்கு ஆதரவு

(கொழும்பு)



முன்னாள் தொழிற்சங்கவாதி பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவின் படுகொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆர். துமிந்த சில்வாவுக்கு ஆதரவாக அரசியல் பழிவாங்கல் பற்றி விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

குறித்த ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவுக்கு இம்முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி படுகொலை வழக்கில் துமிந்த சில்வாவுக்கு மரண தண்டனை அளிக்கப்பட்டமை அரசியல் பழிவாங்கல் என்றும் முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது.

விரைவில் இந்த முறைப்பாடு விசாரணைக்கு எடுக்கப்படும் என்று ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ-4)

# 5ஜி வலையமைப்பு சீனா வரவேற்பு

5G

(கொழும்பு)

நாட்டில் அடுத்த ஆண்டு 5ஜி வலையமைப்பு அறிமுகப்படுத்தப்படவுள்ளதை சீனா வரவேற்றுள்ளது.

இலங்கைக்கான சீனத்தூதரகம் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் இவ்விடயத்தை வரவேற்று பதிவிட்டுள்ளது. அப்பதிவில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தெற்காசியாவின் முன்னோடியாக 5ஜி வலையமைப்பை இலங்கை அறிமுகப்படுத்தவுள்ளதை ஊக்குவிப்பதாகவும் தெரிவித்துள்ளது. (ஐ-4)

# அரசியலமைப்பு சீர்திருத்தத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

## 41 பேர் காயம்



(பாங்கொக்)

தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் அரசியலமைப்பு சீர்திருத்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டமொன்று இடம் பெற்றுள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே ஏற்பட்ட இம் மோதலில் 41 பேர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் அரசியலமைப்பு சீர்திருத்தம் குறித்த விவாதம் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளை போராட்டக்காரர்கள் பாராளுமன்றத்தை முற்றுகையிட முயன்றனர்.

இதனைத் தடுக்க முயன்ற பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும்இடையே மோதல் வெடித்தது. போராட்டக்காரர்கள் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தினர்.

பதிலுக்குப் பொலிஸாரும் தாக்குதல் நடத்தியதுடன், கண்ணீர்ப் புகை பிரயோகம், நீர்த்தாரைப் பிரயோகம் செய்து ஆர்ப்பாட்டக்காரர்களை விரட்டினர்.

மேலும் ஆர்ப்பாட்டக்காரர்கள் முடியாட்சிக்கான சீர்திருத்தங்கள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# பைசர் தடுப்பூசியை சேமித்து வைப்பது சவாலாக இருக்கும் மத்திய அரசு




(டில்லி)

கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிராக அமெரிக்கா தயாரித்துள்ள பைசர் தடுப்பூசியை சேமித்து வைப்பது சவாலாக இருக்கும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பான தேசிய சிறப்பு குழுவின் தலைவராக 'நிதி ஆயோக்' அமைப்பின் உறுப்பினர் டாக்டர் வி.கே. பால் செயற்பட்டு வருகிறார். செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்படி விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், "அமெரிக்காவை சேர்ந்த பைசர் நிறுவனம் தங்களது கொரோனா தடுப்பூசி 90 சதவீதம் பலன் அளித்துள்ளதாக தெரிவித்துள்ளது.

அதுபோல் மாடர்னா நிறுவனம் தங்களது தடுப்பூசி 94.5 சதவீதம் செயற்றிறன் கொண்டது எனத் தெரிவித்துள்ளது. இவ்விரு தடுப்பூசிகளுக்கும் இன்னும் அங்கீகாரம் கிடைக்கவில்லை. நிலைமையை கண்காணித்து வருகிறோம்.

கொரோனா தடுப்பூசிக்கு அங்கீகாரம் கிடைத்தவுடன் அதை கொள்முதல் செய்யவும், விநியோகம் செய்யவும் வியூகம் வகுப்போம். அதற்கான தேசிய திட்டம் இறுதிக்கட்ட தயாரிப்பு நிலையில் இருக்கிறது. பைசர் நிறுவனத்தின் தடுப்பூசி இந்தியாவுக்கு வர பல மாதங்கள் ஆகலாம்.

பைசர் நிறுவனத்தின் தடுப்பூசியை குளிரான கிடங்குகளில் -70 டிகிரி செல்சியஸ் என்ற மிகக்குறைந்த வெப்ப நிலையில் சேமித்து வைக்கப்பட வேண்டும். இதுதான் மிகப்பெரிய சவாலாக இருக்கும். எந்த நாட்டுக்கும் இது சாத்தியம் அல்ல. இருப்பினும் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து வியூகம் வகுப்போம்.

இந்தியாவில் தயாரிக்கப்பட்டு வரும் 5 கொரோனா தடுப்பூசிகள் பரிசோதனையின் பல்வேறு கட்டங்களில் உள்ளன. அவை வெற்றி பெறும் என்று நம்புகிறோம். போதிய எண்ணிக்கையில் டோஸ்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்" எனத் தெரிவித்துள்ளார். (நி-4)

# கமலா ஹரிஸ் குறித்து இனவெறி பிரசாரம்

## 4 பேஸ்புக் பக்கங்கள் முடக்கம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் துணை ஜனாதிபதியாகப் பதவியேற்கவுள்ள கமலா ஹரிஸுக்கு எதிராக இனவெறி, வெறுப்புணர்வு ரீதியாக சில குழுக்கள் பேஸ்புக்கில் பதிவிட்ட கருத்துகளை பேஸ்புக் நிறுவனம் நீக்கியுள்ளதுடன் அப் பேஸ்புக் பக்கங்களையும் முடக்கியுள்ளது.

இந்த பக்கங்களில் ஒன்றில், கமலா ஹரிஸுக்கு அமெரிக்க குடியுரிமையே கிடையாது. அவரது தாய் ஒரு இந்தியர். அவரது தந்தை ஒரு ஜமைக்கன் என்று கூறப்பட்டிருந்தது.



மற்றொரு பதிவில் ஜனநாயக கட்சியினர் நினைப்பது போல கமலா ஹரிஸ் கறுப்பினத்தவரே அல்ல என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

கமலா ஹரிஸை இந்தியாவுக்கு நாடு கடத்த வேண்டும் எனவும் அந்தப் பக்கங்களில் வலியுறுத்தப்பட்டிருந்தன.

இந்தப் பதிவுகளின் கீழ் கமலா ஹரிஸுக்கு எதிரான விமர்சனங்களை அவரை இழிவுபடுத்தும் வகையில் சிலர் பதிவிட்டிருந்தனர். (நி-4)

# இராமாயணம், மகாபாரதம் கேட்டு வளர்ந்த அமெ.முன்னாள் ஜனாதிபதி



(வோஷிங்டன்)

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஒபாமா தனது சிறு வயது காலத்தில் இதிகாசங்களான இராமாயணம் மற்றும் மகாபாரதக் கதைகளைக்கேட்டுநேரத்தை செலவிட்டதாக அவரது சுயசரிதையில் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியான ஒபாமா புதிதாக வெளியிட்ட தனது அரசியல் நினைவுக்குறிப்பான "ஒரு வாக்குறுதியளிக்கப்பட்ட நிலம்" என்ற புத்தகத்தில் இந்திய அரசியல் தலைவர்கள் குறித்தும் இந்தியாவுடனான தனது நினைவலைகள் குறித்தும் பகிர்ந்துள்ளார்.

அவர் தனது சுயசரிதையில் கூறியிருப்பதாவது:-

"உலகின் மக்கள் தொகையில் ஆறில் ஒருபகுதி மக்கள் வாழும் நாடு, 2 ஆயிரத்துக்கும் மேலான தனித்துவமான இனக்குழுக்கள், 700க்கும்மேற்பட்ட மொழிகள் இருக்கும் நாடு இந்தியா.

நான்ஜனாதிபதியாவதற்கு முன்பு இந்தியா வந்ததில்லை. ஆனால், எப்போதும் என் மனதில் இந்தியாவைப் பற்றி சிறப்பானகற்பனை இருந்தது.

என்னுடைய சிறுவயதின் ஒரு பகுதியை இந்தோனேசியாவில் கழித்தேன்.

அப்போது இந்துக்களின் இதிகாசங்களான ராமாயணம், மகாபாரதக் கதைகளைக் கேட்டு வளர்ந்தேன். என்னுடன் இந்தியாவைச் சேர்ந்த, பாகிஸ்தானைச் சேர்ந்த பல மாணவர்கள் கல்வி கற்றனர்.

அவர்கள் மூலமே நான் சமைக்கக் கற்றுக்கொண்டேன். பொலிவுட் படம் பார்க்கக் கற்றுக்கொண்டேன் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# உ.பிக்கு உலக சுகாதார அமைப்பு பாராட்டு



(ஜெனிவா)

கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை உத்தரபிரதேச அரசு சிறப்பாக செயற்படுத்தி இருப்பதாக உலக சுகாதார அமைப்பின் இந்திய பிரதிநிதி ரோடரிகோ ஆப்ரின் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

கொரோனா பாதித்தவர்களின் தொடர்புகளை அடையாளம் காண்பதில் உத்தர பிரதேச அரசின் செயற்பாடு பாராட்டுக்குரியது.

70 ஆயிரம் முன்கள பணியாளர்கள் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர். இத்தகைய செயற்பாடுகள், மற்ற மாநிலங்கள் பின்பற்றும் அளவுக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது என அவர் மேலும் . தெரிவித்தார். (நி-4)

# யாசகம் எடுத்தாலும் கொடுத்தாலும் தண்டனை

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் எச்சரிக்கை



(கொழும்பு)

யாசகம் பெறுவது மற்றும் வழங்குவது தண்டனை வழங்கக்கூடிய குற்றமாகக் கருதப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண எச்சரித்தார்.

நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பு உள்ளிட்ட பிரதான நகரங்களில் யாசகம் பெறுவோரில், 95 வீதமானோர் உண்மையான யாசகர்கள் கிடையாது என்றும் வர்த்தக நோக்கத்துடன் யாசகம் பெறுவோர் தற்போது நாட்டில் அதிகரித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பிரதான ஒருவரின் வழிநடத்தலின் கீழ், பெரும்பாலானோர் யாசகம் பெறுவதாகவும், யாசகம் பெறுவோருக்கு பிரதான நபர் நாளாந்தம் சம்பளத்தை வழங்குவதாகவும் விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ள நிலையில் யாசகம் பெறும் நடவடிக்கைளை நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். (ஜ-4)

# பிரதமரின் பிறந்த தினத்திற்கு தானம் வழங்கும் நிகழ்வு



(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினத்தை முன்னிட்டு, தாய்மார்களுக்கு தானம் வழங்கும் புண்ணிய நிகழ்வொன்று ('கிரி அம்மா தானய') நேற்று புதன்கிழமை முற்பகல் நாராஹேன்பிட அபயராம புரான விகாரையில் இடம்பெற்றது. பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினத்தை முன்னிட்டு இம்முறை 18 ஆவது தடவையாக இந்த தாய்மார்களுக்கான தானம் வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. (நி)

# வரவு-செலவு திட்டத்தில் தோட்டத்தொழிலாளர்கள் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள்

## வடிவேல் சுரேஸ் கவலை

(கொழும்பு)

2020 ஜனவரி மாதம் முதல் தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000 ரூபா வேதனம் வழங்கப்படுமென ஜனாதிபதி தெரிவித்திருந்த நிலையில் தற்போது 2021 ஆம் ஆண்டு ஜனவரி முதல் 1000 ரூபா வழங்கப்படுமென பிரதமர் வரவு- செலவுத்திட்டத்தில் முன்மொழிந்து தொழிலாளர்களை ஏமாற்றியிருப்பதாக ஐக்கிய் மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் கவலை வெளியிட்டுள்ளார்.

கொழும்பு எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது கூட்டு ஒப்பந்தத்தின் மூலம் தொழிலாளர்கள் 750 ரூபாவினை வேதனமாக பெறுகின்றனர். மேலதிகமாக பறிக்கும் கொழுந்துக்கு 40 ரூபா வழங்கப்படுகின்றது. அதேபோல இறப்பர் தோட்ட தொழிலாளர்களுக்கும் கிடைக்கின்றது.

எனவே பொறுப்பு வாய்ந்த அரசாங்கம் என்ற வகையில் அடிப்படைச் சம்பளமாக 1000 ரூபாவையே வழங்க வேண்டும். மொத்த சம்பளமாக 1000 ரூபாவை வழங்குவதற்கு முனையக் கூடாது.

கூட்டு ஒப்பந்தத்துக்கும் இவ் விடயத்துக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. அரசாங்கம் வாக்குறுதியளித்தபடி 1000 ரூபா அடிப்படைச் சம்பளத்தை 2021 ஜனவரி முதலாம் திகதி முதல் வழங்க வேண்டுமென நிதிய மைச்சை கோருகின்றோம்.

எனவே வரவு - செலவுத் திட்ட உரையில் முன்மொழிவதை மாத்திரம் நிறுத்திக் கொள்ளாமல் அதனை செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பாராளுமன்றத்தில் கூறப்பட்ட இக்கூற்றை நாங்கள் சட்ட பூர்வமானதாக எண்ணி நம்புகின்றோம். மக்களுக்கு நியாயமான விடயங்கள் வரும் போது எதிர்க்கட்சி என்ற வகையில் அதனை நாம் ஆதரிப்போம் என தெரிவித்தார். (ஜ-4)

# மனைவியை எரித்து கொன்றவருக்கு மரண தண்டனைத் தீர்ப்பு

(கொழும்பு)

திருகோணமலையில் தனது மனைவியை பெற்றோல் ஊற்றி தீ வைத்து கொலை செய்த குற்றவாளிக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் நேற்று இத்தீர்ப்பினை வழங்கினார். இவர் தனது மனைவியை பெற்றோல் ஊற்றி வைத்து மரணம் ஏற்படுத்தியமை இலங்கை தண்டனை சட்டக்கோவை 296 பிரிவின் கீழ் இந்தத் தண்டனை வழங்கப்பட்டது. (ஜ-4)

# ஆன்டிஜன் பரிசோதனை கருவிகளை வழங்கிய உலக சுகாதார ஸ்தாபனம்

(கொழும்பு)

உலக சுகாதார ஸ்தாபனத்தின் தென்கிழக்கு ஆசியா பிராந்திய அலுவலகம் மற்றும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கை பிராந்தியம் ஆகியன இணைந்து ஒரு இலட்சம் துரித ஆன்டிஜன் பரிசோதனை கருவிகளை வழங்கியுள்ளது.

அத்துடன் எதிர்வரும் வாரங்களில் மேலும் துரித ஆன்டிஜன் பரிசோதனை கருவிகள் வழங்கப்படும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. (ஜ)

# சடலம் மீட்பு


(அம்பலாங்கொடை)

அம்பலாங்கொடை - ரன்தொம்பே கடற்கரை பகுதியிலிருந்து பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த பெண்ணின் சடலம் நேற்று முன்தினம் மாலை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். 67 வயதுடைய மொறட்டுவை பகுதியை சேர்ந்த பெண் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணின் சடலம் உடற்கூற்று பரிசோதனைகளுக்காக பலபிட்டி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4)

# மரித்தவர்களை நினைவுகூர உறவுகளுக்கு உரித்துண்டு



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் விடுதலைக் காகப் போராடி தம் இன்னுயிரை ஈந்த போராளிகளையும் பொதுமக்களையும் நினைவு கூருவதென்பது தமிழ்த் தேசிய இனத்தின் அடிப்படை உரிமையாகும்.

அந்தவகையில் எதிர்வரும் நவம்பர் 27ஆம் திகதியன்று தமக்காக மரணித்தவர்களை நினைவுகூருவதைத் தடுப்பது தான் ஜனநாயக சோசலிச குடியரசு ஆட்சியா? என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இணைப் பேச்சாளருமான சுரேஷ் க.பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவரது அறிக்கையில்,

யுத்தத்தினால் மடிந்து போன மக்களை, போராளிகளை நினைவு கூருவதற்கான நடைமுறையை இலங்கை அரசாங்கம் எப்பொழுதும் எதிர்த்தே வந்திருக்கின்றது. நினைவு கூருவதைக்கூட இரகசியமாகச் செய்யவேண்டிய துர்ப்பாக்கிய நிலை தமிழ் மக்களுக்கு ஏற்பட்டு வந்திருக்கிறது.

தமது மக்களின் விடுதலைக்காகப் போராடியவர்களை போராளிகள் என்று பார்ப்பதற்கு தமிழ் மக்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் போராளிகள் என்பவர்கள் பயங்கரவாதிகள். எம்மைப் பொறுத்தவரையில், அவர்கள் விடுதலை வீரர்கள், புனிதர்கள், அவர்கள் எமது விடுதலைக்காக தமது உயிர்களைத் தியாகம் செய்தவர்கள். ஆகவே அவர்களை நினைவு கூருவதற்கான சகல உரித்தும், தகைமையும் தமிழ் மக்களுக்கு இருக்கின்றது. இது சர்வதேச ரீதியில் ஏற்படுத்தப்பட்ட நியமமும்கூட.

ஆனால், எம்மை அடக்கியாள முற்படும் அரசாங்கமானது, எமது நினைவுச் சின்னங்களை அடித்து நொறுக்கி துயிலும் இல்லங்களை தரைமட்டமாக்கியது. எமக்காக மரணித்தவர்களை நினைத்துக் கூடப் பார்க்கக்கூடாது என்று இப்பொழுது கூறி வருகின்றது. நாம் இன்னமும் அடக்கு முறையின் உச்சத்தில் இருக்கிறோம் என்பதைத்தான் அரசாங்கம் வருடாந்தம் வெளிக்காட்டி நிற்கின்றது.

எனவே அரசாங்கம் இவ்வாறான அடக்குமுறை நடவடிக்கைகளைக் கைவிட்டுதமிழ் மக்கள் மரித்துப் போன தமது உறவுகளை நினைவு கூருவதற்கான உரிமையை ஏற்றுக் கொள்ளவேண்டும் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# கார்த்திகை மாத இராசி பலன்கள்

## 16.11.2020 - 15.12.2020



சார்வரி வருடம் கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் வக்கிரம் பெற்றி ருக்கிறார். நவம்பர் 24 ஆம் திகதி அவர் வக்கிர நிவர்த்தி ஆனதும், உங்கள் எண்ணங்கள் அனைத்தும் ஈடேறும். தொழில் வளம் சிறப்பாக இருக்கும்.

**துலாம் இராசியில் சுக்கிரன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 2, 7 ஆகிய இட ங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். இவர் நவம்பர் 17 ஆம் திகதி துலாம் இராசியான தனது சொந்த வீட்டிற்கு வருகின்றார். அங்குள்ள புதனுடன் சேர்ந்து 'புத-சுக்கிர யோகத்தை உரு வாக்குகின்றார். இது ஒரு பொற்கால மாகும். இடம், பூமி சேர்க்கை உண்டு. குடும்பத்தில் சுப காரியங்கள் நடை பெறும். டிசெம்பர் 12 ஆம் திகதி விருச்சிக இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார். அங்குள்ள சூரியன் மற்றும் கேதுவோடு இணைவதால் விரயங்கள் ஏற்படலாம்.

**செவ்வாய் வக்கிர நிவர்த்தி காலம்**

உங்கள் இராசிநாதன் செவ்வாய், இதுவரை மீன இராசியில் வக்கிரம் பெற்று சஞ்சரித்து வந்தார். நவம்பர் 24 ஆம் திகதி அவர் வக்கிர நிவர்த்தியா கின்றார். இராசிநாதன் பலம்பெறும் இந்த நேரம் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப் படுத்தும். இணைந்து செயற்பட சகோத ரர்கள் முன்வருவர். சொத்துக்கள் வாங்கு வது அல்லது பத்திரப் பதிவில் இருந்த தடைகள் அகலும். துணிந்து சில முடிவு களை எடுத்து தொழில் வளத்தைப் பெருக்கிக்கொள்வீர்கள்.

**விருச்சிக புதன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 7 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த புதன், நவம்பர் 25 ஆம் திகதி எட்டாமிடத்திற்கு வருகின்றார். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் உண்டு. உங்கள் இராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். 6 இற்கு அதிபதி 8 இல் வரும்பொழுது, இல்லம் தேடி நல்ல மாற்றங்கள் வரும். அல்லும் பகலும் பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைக்கும்மாமன், மைத் துனர் வழியில் ஏற்ப ட்ட மனக்கசப்பு மாறும்.

**மேஷ செவ்வாய் சஞ்சாரம்**

டிசெம்பர் 9 ஆம் திகதி மேஷ இரா சிக்கு செவ்வாய் செல்கின்றார். உங்கள் இராசிநாதன் இராசியிலேயே சஞ்சரிக்




கும் இந்த நேரம் ஒரு அற்புதமான நேர மாகும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். சொந்த பந்தங்களின் ஆதரவு கிடைக் கும். இல்லத்தில் நீண்ட நாட்களாக எதிர் பார்த்த மங்கல ஓசை இப்பொழுது கேட்க லாம். பிள்ளைகளின் மேற்படிப்பு சம்பந்த மாக நீங்கள் எடுத்த முயற்சிகள் வெற்றி தரும் நேரமிது. தொழிலில் புதிய ஒப்பந் தங்கள் வந்து சேரும்.

**தனுசு புதன் சஞ்சாரம்**

டிசெம்பர் 12 ஆம் திகதி தனுசு இராசிக்கு புதன் வருகின் றார். உங்கள் இராசிக்கு 3, 6 இற்கு அதிபதியான புதன் 9 இல் வரும் பொழுது, உத்தியோகத்தில் ஏற்றங்க ளும் மாற்றங்களும் வந்து சேரும். நீங்கள் கேட்ட சலுகைகளை கொடுக்க மேலதிகாரிகள் காத்திருப்பர். பாக்கிய ஸ்தானம் பலம் பெறுவதால், எதிர்பாராத திருப்பங்கள் உருவாகும். பெற்றோர் வழி ஆதரவோடு பிரச்சினையில் இருந்து விடுபடுவீர்கள்.

இம்மாதம் சஷ்டி அன்று விரதமிரு ந்து சண்முகநாதப் பெருமானை வழி படுவது நல்லது

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் பொருளாதார வளர்ச்சி அதி கரிக்கும். ஆரோக்கியம் சீராகும். ஆதா யம் தரும் தகவல்கள் அதிகம் கிடைக் கும். கணவன்- மனைவிக்குள் கனி வும்பாசமும் கூடும். பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். தாய்வழி ஆதரவு உண்டு. பணிபுரியும் பெண்களுக்கு, மேலிடத்தில் பாராட்டும், புகழும் கிடைக்கும். திருக்கார்த்திகை அன்று முருகப்பெருமான் வழிபாடு முன்னேற்றத்தை வழங்கும்.

## எண்ணங்கள் அனைத்தும் ஈடேறும்

ஜோதிடக் கலாமணி
சிவபுரி சிங்காரம்



சார்வரி வருடம் கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சுக்கிரன் நீசம் பெற்று சஞ்சரிக்கின்றார். அவரை, நீசம் பெற்ற குரு பார்க்கின்றார். சுக்கி ரனும் புதனும் பரிவர்த்தனை யோகம் பெற்று சஞ்சரிக்கின்றனர். அந்த நேரத் தில் குருவும் சனியும் பரிவர்த்தனை யோகம் பெறுகின்றார்கள். எனவே இம்மாதம் உங்களுக்கு நன்மைகள்? அதிகம் நடைபெறும்.

**துலாம் இராசியில் சுக்கிரன் சஞ்சாரம்**

நவம்பர் 17 ஆம் திகதி, சுக்கிரன் துலாம் இராசியான தனது சொந்த வீட்டிற்கு மாறுகின்றார். அங்குள்ள புதனோடு சேர்ந்து 'புத-சுக்கிர யோக' த்தை உருவாக்குகின்றார். இதன் விளைவாக பொருளாதார முன்னேற் றம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் புதிய பொறுப்புகள் தேடி வரும். டிசெம்பர் 12 ஆம் திகதி விருச் சிக இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார். இக்காலத்தில் சுக்கிரனின் பார்வை உங்கள் இராசியில் பதிகின்றது. எனவே பயணங்கள் அதிகரிக்கும். வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டு வீர்கள்.

**செவ்வாய் வக்கிர நிவர்த்தி காலம்**

நவம்பர் 24 ஆம் திகதி செவ்வாய் வக்கிர நிவர்த்தியாகின்றார். விரயாதிபதி லாப ஸ்தானத்தில் பலம் பெறும்பொழுது, விரயத்திற்கேற்ப வரவு வந்துகொண்டே இருக்கும். திருமண முயற்சிகள் கைகூ டும். உத்தியோகத்தில் நீண்டதூரப் பயணங்களும் சம்பள உயர்வும் கிடைக் கலாம்.

**விருச்சிக புதன் சஞ்சாரம்**

நவம்பர் 25 ஆம் திகதி, புதன் விருச்சிக இராசிக்குச் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 2, 5 ஆகிய இடங்க ளுக்கு அதிபதியானவர் புதன். அவர் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, குடும்பத்தில் நல்ல சம்பவங்கள் நடை பெறும். திருமணம் போன்ற சுபகாரியப் பேச்சுக்கள் திடீரென உருவாகி, மனை யில் மங்கல ஓசை கேட்க வழிபிறக்கும். பிள்ளைகளின் மேற்படிப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சிகளும் தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளும் கைகூடும் நேரமிது.

வெளிநாட்டில் இருந்து சொந்த ஊர் திரும்ப முடியாமல் இருந்தவர்களுக்கு இப்பொழுது நல்ல தகவல் வந்து சேரும்.

**மேஷ செவ்வாய் சஞ்சாரம்**

டிசெம்பர் 9 ஆம் திகதி செவ்வாய்




மேஷ இராசிக்கு வருகின்றார். மேஷ இராசி செவ்வாய்க்கு சொந்த வீடாகும். உங்கள் இராசிக்கு விரய ஸ்தானத்தில் செவ்வாய் இருப்பதால் இக்காலத்தில் விரயங்கள் கொஞ்சம் கூடுதலாகவே இருக்கும்.

உடன்பிறப்புகளின் திருமணத்தை முன்னின்று நடத்தும் வாய்ப்பு உண்டு. ஊர் மாற்றம், வீடு மாற்றம், உத்தியோக மாற்றம் போன்றவை கூட வரலாம். திசாபுத்தி பலமிழந்தவர்கள் வாங்கிய இடத்தை விற்க நேரிடும்.

**தனுசு புதன் சஞ்சாரம்**

டிசெம்பர் 12 ஆம் திகதி, தனுசு இராசிக்கு புதன் செல்கின்றார். மறைந்த புதனால் நிறைந்த தன இலாபம் உண்டு. என்றாலும் தன பஞ்சமாதிபதியாக புதன் விளங்குவதால் கொடுக்கல்-வாங்கல் களில் கவனம் தேவை. பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் திடீரென விலக நேரிடலாம்.

இம்மாதம் சதுர்த்தியன்று விரதமி ருந்து ஆனைமுகப் பெருமானை வழி படுவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் நிதானத்தோடு செயற்பட வேண்டியது அவசியம். அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் குடும்பச் சுமை கூடும். திட்டமிட்ட காரியங்கள் திசைமாறிச் செல்லலாம். கணவன்- மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்லுங்கள். தாய் வழி ஆதரவு ஓர ளவு கிடைக்கும். பணிபுரியும் பெண்க ளுக்கு உழைப்பிற்கேற்ற பலன் கிடைக் காது. கேட்ட சலுகைகள் கிடைப்பதிலும் தாமதம் ஏற்படும். வியாழன் விரதமும், குரு வழிபாடும் நன்மையை வழங் கும். (தொடரும்)

## நன்மைகள் அதிகம் நடைபெறும்

# கரையொதுங்கிய புள்ளிச்சுறா



(புத்தளம்)

புத்தளம் உடப்பு பொலிஸ் பிரிவுக்குட் பட்ட பாரிபாடு கடற்கரையோரத்தில் கடந்த திங்கட் கிழமை அரிய வகை புள்ளி சுறா மீன் ஒன்று கரையொதுங்கியுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

குறித்த சுறா மீன் பாரிபாடு கடற்கரையோரப் பகுதியில் கரையொதுங்கியதுடன், அங்கிருந்து மெல்ல மெல்ல நகர்ந்து செல்வதாகவும் மீனவர்கள் தெரிவித்தனர்.

சுமார் 2 ஆயிரம் கிலோ கிராமுக்கும் அதிகமான நிறையுள்ள குறித்த சுறா 15 அடி நீளம் கொண்டதாக காணப்படுவதாகவும் கரையொதுங்கிய குறித்த சுறாவை பார்வையிட பெரும் எண்ணிக்கையிலானோர் சென்றிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# கண்டியில் நில அதிர்வு

(கண்டி)

கண்டி திகன பகுதியில் சிறியளவிலான நில அதிர்வு ஏற்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் 9.28 மணி அளவில் குறித்த நில அதிர்வு ஏற்பட்டதாக புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் குறித்த நில அதிர்வானது ரிக்டர் அளவுகோலில் 2.0 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது. (ஐ-4)

# மலேரியா நோய் பரவும் அபாயம்

## சுகாதாரப் பிரிவினர் எச்சரிக்கை

**(மகியங்கனை).**

**பிபில - மகியங்கனை கம்பஹா ஆகிய பிரதேசங்களில் மலேரியா நோயாளிகள் அடையாளம் காணப்பட்டதனை தொடர்ந்து மலேரியா நோய் பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.**

மலேரியா நோய் பரவல் தொடர்பில் சுகாதாரப் பிரிவு அதிகாரியொருவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

பிபில பிரதேசத்தில் குளம் நிர்மாணிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் ஒப்பந்த நிறுவனத்தின் ஊழியர்கள் மலேரியா நோயாளிகள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் இதற்கு முன்னர் உகண்டாவில் பணியாற்றி மீண்டும் நாட்டிற்கு வருகை தந்து இங்கும் பணியாற்றியுள்ளனர். இதன் போது ஏற்பட்ட நோய் அறிகுறிகளின் பின்னரான பரிசோதனையில் மலேரியா நோய் தொற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் பரவலாக தெரிவு செய்யப்படும் பொது மக்களிடம் இரத்த மாதிரி பெற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

அங்கு மலேரியா நோயாளிகள் அடையாளம் காணப்படவில்லை என்றாலும், நுளம்புகள் ஊடாக நோய் பரவும் ஆபத்துக்கள் உள்ளதாகவும் காய்ச்சல் அறிகுறிகள் காணப்பட்டால் இது தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# கொத்தணியை விசாரிக்க சிரேஷ்ட அதிகாரிகள்

(கொழும்பு)

மினுவாங்கொட பிரண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலை கொரோனா கொத்தணி தொடர்பில் விசாரிக்க குற்றவியல் புலனாய்வு திணைக்களத்தின் பொலிஸ் துணை ஆணையாளரின் வழிகாட்டுதலின் கீழ் குற்றவியல் புலனாய்வு திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகளை நியமித்துள்ளதாக பதில் பொலிஸ்மா அதிபர் சட்டமா அதிபருக்கு தெரிவித்துள்ளார்.

மினுவாங்கொட பிரண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலை கொரோனா கொத்தணி பரவல் தொடர்பில் விசாரணையை ஆரம்பிக்குமாறு பதில் பொலிஸ்மா அதிபருக்கு சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா பணிப்புரை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# துறைமுக அதிகாரசபையின் பணி அத்தியாவசிய சேவையாக அறிவிப்பு



(கொழும்பு)

இலங்கைத் துறைமுக அதிகார சபையின் பணிகள் அத்தியாவசிய சேவைகளுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நள்ளிரவு இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

1979ஆம் ஆண்டு 61 ஆம் இலக்க அத்தியாவசிய சேவைகள் சட்டத்தின் இந்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

மக்களின் அன்றாட வாழ்க்கையை முன்னெடுப்பதற்கு அவசியமான சேவைகளில் ஒன்றாகத் துறைமுக அதிகார சபையின் பணியை அறிவிப்பதாக ஜனாதிபதி அதில் குறிப்பிட்டுள்ளார். (ஐ-4)

# இன்று ஒரு தகவல்

## தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# இதயத் துடிப்பு மானி

1816 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி பிரான்ஸ் தேசத்திலே உள்ள ஒரு மருத்துவமனை.அங்கே ஒரு இளம் டாக்டர் கொஞ்ச நாளைக்கு முன்னால் தான் அந்த வைத்தியசாலையில் புதிதாக வேலைக்குச் சேர்ந்திருக்கின்றார். அவர் பெயர் ஹெனேலனக்.

அவர் அன்றைக்கு காலையில் அந்த மருத்துவ மனையில் ரவுண்ட்ஸ் வந்து கொண்டிருக்கின்றார்.

வார்டிலே ஒரு படுக்கையில் ஒரு இளம் பெண் படுத்திருந்தாள்..அந்த பெண்ணுக்கு இருதய நோயாக இருக்கலாம் என்பது ஏனைய டாக்டர்களின் சந்தேகம்.

அந்தக் காலத்திலேயெல்லாம் ஒருத்தருடைய இருதயத் துடிப்பை தெரிந்து கொள்ள வேண்டும்மென்றால் நோயாளியின் மார்பிலே டாக்டர் காதை வைத்துப் பார்த்துத் தான் தெரிந்து கொள்வார்கள். ஆனால் இந்தப் பெண்ணோ இளம்பெண்...அந்த டாக்டரும் புதிதாக சேர்ந்திருக்கிறவர்...அதனால் பரிசோதனை செய்யத் தயங்கினார். கொஞ்ச நேரம் யோசித்தார்.திடீர் என்று ஒரு ஞாபகம் வந்தது அவருக்கு.

அன்றைக்கு விடியற்காலையில் தோட்டத்தில் வோக்கிங் போனபொழுது இரண்டு சின்னப் பசங்க ஒரு மரக்கட்டையை வைத்து விளையாடிக் கொண்டிருந்தார்கள்.அது ஒரு நீளமான மரப்பலகை. அதிலே ஒரு முனையில் ஒரு பையன் தன்னுடைய காதை வைத்துக் கொண்டிருக்கின்றான்.மறு முனையில் இன்னொரு பையன் அந்த மரப்பலகையை ஒரு ஆணியாலே கீறிக் கொண்டிருந்தான்... ஒரு முனையில் ஆணியாலே கீறும் பொழுது மறு முனையில் காதை வைத்திருக்கின்ற பையனுக்கு அந்த சத்தம் துல்லியமாகக் கேட்கின்றது.

அந்த டாக்டருக்கு காலையிலே பார்த்த இந்த விளையாட்டு ஞாபகத்திற்கு வந்தது.உடனே என்ன செய்தார் தெரியுமா?

ஒரு நீளமான காகிதத்தை எடுத்தார். அதை உருளை மாதிரி உருட்டினார். ஒரு முனையை அந்த நோயாளியின் மார்பிலே இடது பக்கம் வைத்தார். இன்னொரு முனையிலே தன்னுடைய காதை வைத்தார் என்ன ஆச்சரியம்.

நோயாளி மார்பிலே நேரடியாக காதை வைத்துக் கேட்பதைவிட துல்லியமாக கேட்டது இதயத் துடிப்பு இதயத் துடிப்பு மட்டுமல்ல மூச்சு இழுத்து விடுவது திரவப் பொருள்களின் அசைவும் எல்லா சத்தமும் தெளிவாகக் கேட்கின்றது.

கிரேக்க மொழியில் ஸ்டெத்தாஸ் என்றால் மார்பு ஸ்கோப்பின் பார்ப்பது என்று அர்த்தம்.

அதனால் டாக்டர் ரெனேலனக்- தான் கண்டு பிடித்த கருவிக்கு ஸ்தெஸ்கோப் என்று பெயர் வைத்தார்.

அவர் முதல் மொடலையும் செய்தார். அளவு மிகவும் பெரிதாக இருந்தது. சுலபமாக எடுத்துக் கொண்டு போக சிரமமாக இருந்தது.

அதனால் அவரே அதைப் பின்பு இரண்டு பிரிவாக தயார் செய்தார். இது இரண்டு துண்டையும் டாக்டர் தன்னுடைய கோட்டுப் பாக்கெட்டில் வைத்திருக்கலாம்.தேவைப்படும் பொழுது எடுத்து ஒன்றாக சேர்த்துக் கொள்ளலாம்.

தன்னுடைய இந்த கண்டு பிடிப்பைப் பற்றி அவர் ஒரு புத்தகம் எழுதினார். நிறைய விற்றது. புகழும் பணமும் சேர்ந்தது.பணமும் புகழும் வந்து சேர்ந்தது மாதிரியே அவருக்கு நோயும் வந்து சேர்ந்தது. அது என்ன நோய் என்று கண்டு பிடிப்பதற்கும் அவர் கண்டு பிடித்த கருவிதான் உபயோகப்பட்டது. அவரே அதைக் கண்டு பிடித்தார். அவருக்கு வந்திருந்தது காச நோய்.1826 ஆம் வருடம் ஒகஸ்டு மாதம் 13 ஆம் திகதி உலகத்தின் முதல் ஸ்டெதஸ்கோப்பைக் கண்டு பிடித்த டாக்டர் ரெனேலனக் காலமானார்.அவர் இறப்பதற்கு முன்னால் மரத்தால் செய்து வைத்திருந்த ஸ்டெதஸ்கோப்பை தனக்கு வேண்டப்பட்ட ஒரு டாக்டரிடம் கொடுத்து என்னுடைய சொத்துக்களிலேயே மிகவும் உயர்ந்தது இது என்று சொன்னார்.

அதன்பின்பு மூன்று வெள்ளைக்காரர்கள் சேர்ந்து இந்த கருவியிலே சில மாற்றங்களை செய்தார்கள். ஆனால் 1829 இலே லண்டனிலே டாக்டர் நிகோலஸ் என்பவர் ஒரு காதாலே இதயத் துடிப்பைக் கேட்பதைவிட டாக்டர் இரண்டு காதாலேயும் கேட்பது தான் சரியாக இருக்கும் என்று ஒரு கருத்தை வெளியிட்டார். அதன் பின்பு மிகவும் காலம் கழித்து 1852 இலே ஜார்ஸ் காமான் என்பவர் இறப்பர் டியூப்களை உபயோகப்படுத்தி இரண்டு காதாலேயும் கேட்கின்றது போல் ஒரு புதிய வடிவத்தை அதற்குக் கொடுத்தார்.

அதற்குப் பின்பு அதிலே படிப்படியாக எவ்வளவோ மாற்றங்கள்... இருந்தாலும் ஆரம்பத்திலே டாக்டர் ரெனேலனக் உருவாக்கிய அடிப்படை மொடலை யாரும் மாற்றி அமைக்கவில்லை என்பது தான் முக்கியமான விடயம்.நமக்கு தெரிந்த ஒரு வைத்தியசாலை ..அதிலே...ஒரு நோயாளி..காலை நேரத்திலே நேர்ஸ் நேர்ஸ் என்று கத்தினார். நேர்ஸ் அவசரமாக ஓடி வந்து என்ன விடயம் என்று கேட்டார்கள்.

சிஸ்டர் இங்கே பாருங்கள்... உங்கள் டாக்டர் என் நெஞ்சிலே அவர் காதை வைத்துக் கேட்கின்றார்... என்றார் நோயாளி.

சிஸ்டர் பதட்டப்படாமல் அதனால் என்ன? இந்த டாக்டர் பழைமையான விடயங்களிலே மிகவும் நம்பிக்கை உள்ளவர்.அதனால் ஸ்டெதஸ் கோப் பை உபயோகப்படுத்தாமல் காதை வைத்துக் கேட்கின்றார். அதனால் என்ன? என்றார்.

ஐயோ...அதற்காக இல்லை சிஸ்டர். இவர் ஏன் நெஞ்சிலே தலையை வைத்தது நேற்று ராத்திரி 9 மணி. இன்னமும் தலையை எடுக்கவே இல்லை. அதற்காகத்தான் உங்களைக் கூப்பிட்டேன் என்னவென்று பாருங்கள்..என்றார் அவர்..



தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் வடமாகாண மர நடுகை மாதச் செயற்பாடுகளில் ஒன்றாக கடந்த ஞாயிற்றுக்கிழமை வாதரவத்தை வீரவாணியின் உள்ளக வீதிகளில் 100 இலுப்பை மரக் கன்றுகள் நடுகை செய் யப்பட்டன. வீரவாணி சமூக அபிவிருத்திக் குழுவைச் சேர்ந்த யோகநாதன் யகேன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழ்த் தேசியப் பசுமை இயக் கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், பொருளாளர் க.கேதீஸ்வரநாதன், சூழல் பாதுகாப்பு அணியின் துணைச் செயலாளர் த. யுகேஸ் ஆகியோருடன் கிராமத்து இளைஞர்களும் பங்கேற்றனர்.

# சிறந்த விவசாயிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண விவசாயத் திணைக்களத்தின் யாழ்ப்பாண மாவட்ட அலுவலகத்தால் 2020 ஆம் ஆண்டிற்கான சிறந்த விவசாயிகள் தெரிவானது சிறந்த வீட்டுத்தோட்டச் செய்கையாளர்கள், சிறந்த சேதன விவசாயச் செய்கையாளர்கள், சிறந்த விவசாயச் செயன்முறைத் தொழில் நுட்பங்களை நடைமுறைப்படுத்துபவர், சிறந்த காளான் செய்கையாளர் ஆகிய நான்கு பிரிவுகளில் நடத்தப்படவுள்ளது.

போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் போட்டியாளர்கள் தங்கள் பகுதியிலுள்ள விவசாயப் போதனாசிரியர் அலுவலகத்தில் போட்டிக்கான விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

பூர்த்தி செய் யப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் விவசாயப் போதனாசிரியருக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். அல்லது மாவ ட்ட காரியாலயத்தில் சமர்ப்பிக்க வும். கடித உறையின் இடது பக்க மேற்பக்கத்தில் "சிறந்த விவசாயிகள் தெரிவு- 2020" எனக் குறிப்பட்டப்படல் வேண்டும்.

விவசாயத்திணைக்களத்தால் கடந்த காலங்களில் மாவட்ட மட்டத்தில் சிறந்த போட்டியாளராக கௌரவிக்கப் பட்டவர்கள் ஏனைய செய்கையாளர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கும் வகையில் இப்போட்டியில் கலந்து கொள்வதைத் தவிர்க்குமாறும் மேலதிக தொடர்புகளுக்கு 021 222 2175, 077 305 1363, 077 691 3456 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் யாழ்ப்பாணம் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி அ.சிறிரங்கன் அறிவித்துள்ளார். (5)




அண்மையில் வெளியாகிய தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் 198 புள்ளிகளைப் பெற்று வடமாகாணத்தில் முதலிடம் பெற்ற தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவி சுபாஸ்கரன் ஜனுஸ்கா தேசிய சேமிப்பு வங்கியின் சுன்னாகம் கிளையினரால் கடந்த திங்கட்கிழமை கௌரவிக்கப்பட்டார்.

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் யாழ். மாவட்ட தொழிற்பயிற்சி நிலையத்தில் கற்பிப்பதற்கு முதியோர் பராமரிப்பாளர் கற்கைநெறி மற்றும் ஜப்பான் மொழியியல் கற்கை நெறி என்பவற்றிற்கு போதனாசிரியர்களிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ண்ணப்பிக்க விரும்புவோர் தமது சுயவிபரக் கோவை, சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் அனுபவச் சான்றிதழ்கள் என்பவற்றினை இணைத்து உதவிப்பணிப்பாளர், இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, இல. 12/4, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு யாழ்ப்பாணம், இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (5)

● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ●

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் இயங்கும் மும்மொழிக் கற்கை நிலையத்தில் 2020 இல் க.பொ.த உயர் தரபரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு இரண்டாம் மொழி சிங்களம், ஆங்கிலம் ஆகிய பாடநெறிகள் டிசெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட உள்ளன.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை மும்மொழிக் கற்கை நிலையத்திலும், வடமாகாண கல்வித் திணைக்களத்தின் www.edudept.np.gov.lk என்ற இணையத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

இவ் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்திசெய்து எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் நேரிலோ, தபால் மூலமோ யா/கலட்டி மெதடிஸ் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் மேலதிக விபரங்களுக்கு 021 223 1344 என்ற தொலைபேசி இலக்கத்துடன்தொடர்பு கொள்ளுமாறும் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார். (5)

# சேர்.பொன்.இராமநாதன் குருபூசை

(யாழ்ப்பாணம்)

பரமேஸ்வராக் கல்லூரியின் தாபகரும் சைவப் பெருவள்ளலாருமாகிய சேர். பொன். இராமநாதனின் 90 ஆவது குரு பூசை நாளை மறுதினம் 21 ஆம் திகதி சனிக்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 8 மணிக்கு பல்கலைக்கழகத்தினுள் அமைந்துள்ள பார்வதி சமேத பரமேஸ்வரர் ஆலயத்தில் விசேட பூஜை, வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

சேர். பொன். இராமநாதனின் உருவச் சிலைக்கும், சபா மண்டபத்தில் உள்ள உருவப்படத்துக்கும் துணைவேந்தரினால் மலர்மாலை அணிவித்து வணக்கம் செலுத்தப்படவுள்ளது.

பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர் சபை, ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலய பரிபாலன சபை மற்றும் யாழ். பல்கலைக்கழக இந்து மன்றம் ஆகியவை கூட்டாக இந் நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன. (5)

# அடையாள அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

வவுனியா பாரதிபுரம் இல.200 எனும் முகவரியை கொண்ட சுப்பிரமணியம் நாகேந்திரன் என்பவரது 199004 603901 எனும் இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உரியவர் நேரில் வருகை தந்து வலம்புரி பத்திரிகை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும். (5-4)

# வரவு-செலவுத் திட்டம் வெற்றி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத்திட்ட விசேட கூட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் இடம்பெற்றது.

38 உறுப்பினர்களைக் கொண்ட வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் இருவர் சுகயீன விடுப்பிலும் ஒரு உறுப்பினர் பதவி வெற்றிடமாகவுள்ள நிலையில் 35 உறுப்பினர்கள் சபையில் பிரசன்னமாகியிருந்தனர்.

அதில் வரவு-செலவுத்திட்டத்திற்கு ஆதரவாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகளைச் சேர்ந்த சகலரதும் ஆதரவுடன் 32 வாக்குகளைப் பெற்று வரவு-செலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்டது. (5-4)

# நாட்டில் கொரோனாத் தொற்று நீங்க வேண்டி யாகம்



(குப்பிழான்)

நாட்டில் கொரோனாத் தொற்று நீங்கவும், மக்கள் சுக வாழ்வு வாழவும் இறையருள் வேண்டி குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தில் கடந்த திங்கட்கிழமை சிவபூமி அறக் கட்டளையின் தலைவர் செஞ் சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் விசேட யாகம் நடைபெற்றது.

கோப்பாய் சுப்பிரமுனிய கோட்டத்தின் முதல்வர் ரிஷி தொண்டுநாத சுவாமிகள் மேற்படி நிகழ்வில் கலந்து கொண்டு யாகத்தை சிறப்பித்தார். யாகத்துடன் பூஜை, வழிபாடுகளும் நடந்தேறின. (5-4-18)

# கோவில் உண்டியல் உடைத்து திருட்டு


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அத்தியடி பகுதியில் அமைந்துள்ள ஆலயமொன்றில் திருட்டுச் சம்பவமொன்று நேற்று அதிகாலை 5 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, அத்தியடி அம்பலவாணர் வீதியில் அமைந்துள்ள அத்தியடி வீரகத்தி பிள்ளையார் கோவிலினுள் இனந்தெரியாத நபர்கள் நுழைந்து ஆலய உண்டியலை உடைத்து அதிலிருந்து பணத்தை திருடிச்சென்றுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-4)

# ட்ரோன் கண்காணிப்பு தனிநபர் உரிமையை மீறும் செயல்



**(கொழும்பு) தொற்றுநோய் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள நிலையில் உளவு பார்க்க பாதுகாப்புப் படையினரால் அண்மையில் விடுக்கப்பட்ட ட்ரோன்களும் அதிக சக்திவாய்ந்த ஜெட் விமானங்களும் தனிநபரின் உரிமைகளை மீறுவதாக அமைந்துள்ளதாகவும் சர்வதேச ரீதியாக தடை செய்யப்பட்ட ஒரு செயற்பாடு என பிரான்ஸ் நீதிமன்றம் வலியுறுத்தியுள்ளது.**


இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

கொரோனா அச்சத்தில் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் உள்ளவர்களைக் கண்டறிவதற்கு இலங்கை அரசாங்கத்தின் ஆயுதப்படைகளும் பொலிஸாரும் ட்ரோன்களைப் பயன்படுத்தி சிறப்புக் கண்காணிப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ள செயற்பாட்டை பிரான்ஸ் நீதிமன்றம் மனிதர்களின் தனியுரிமையை மீறும் செயல் என அறிவித்திருந்ததாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தப்பட்ட சட்டங்களை மீறுபவர்களை அடையாளம் காணும் முயற்சியில் பொலிஸார் விமானப்படையின் உதவியுடன் கடந்த 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை ட்ரோன்களைப் பறக்கவிட்டது.

அதேநாளில் ஆளில்லா இலகுரக விமான ரெஜிமென்ட்டை நிறுவுவதாக இராணுவம் அறிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# ஆலய வழிபாடு ஏன்–எதற்கு – எப்படி



## கருவறையின் தேவ இரகசியம்

(தொடர்ச்சி)

கருவறை வலுவாக இருக்க வேண்டும் என்பதிலும் நம் முன்னோர்கள் மிகவும் கவனம் செலுத்தினார்கள். தேப்பெருமா நல்லூரில் உள்ள சிவாலய கருவறை தேன் கலந்த சுண்ணாம்பால் கட்டப்பட்டது. பெரும்பாலான கருவறைகள் இப்படித்தான் கட்டப்பட்டுள்ளன. அதுபோல கருவறை வடிவமைப்பிலும் மிகுந்த நுட்பம் கடைப்பிடிக்கப்பட்டது.

சிதம்பரம் நடராஜர் ஆலய கருவறை இதயம் போன்றது. வேலூர் அருகே விரிஞ்சிபுரத்தில் உள்ள மார்க்கபந்தீஸ்வரர் ஆலய கருவறை ஓங்கார வடிவத்துடன் இருக்கிறது.

கங்கை கொண்ட சோழபுரத்தில் உள்ள பிரகதீஸ்வரர் ஆலய கருவறை அமைப்பு ஆச்சரியப்படத்தக்கது. சந்திர காந்த கல்லால் உருவான இந்த கருவறை வெயில் காலத்தில் குளிர்ச்சியாகவும் குளிர்காலத்தில் வெப்பமாகவும் இருக்கும்.

இப்படி பல சூட்சுமங்கள் கொண்ட கருவறைகளை அமைத்த நமது முன்னோர்கள் அவற்றை சற்று இருட்டாக வைத்தனர். அதிலும் ஒரு அறிவியல் பின்னணி உள்ளது.

கருவறை விமான கலசம் மூலம் சூரிய கதிர்களின் அலை மூலவர் சிலைக்கு கடத்தப்படும். அதேசமயம் சிலைக்கு அடியில் உள்ள யந்திரம் பூமிக்கு அடியில் இருந்து கிடைக்கும் ஆற்றல்களை மூலவர் சிலைக்கு கடத்தும்.

இதனால் கருவறையில் இறை ஆற்றல்கள் அனைத்தும் ஒன்று திரண்டு நிரம்பியிருக்கும். கருவறை சற்று இருட்டாக இருந்தால்தான் அந்த இறை ஆற்றல்கள் ஆலயத்தின் மற்ற பகுதிகளுக்குப் பரவும்.

இந்த விஞ்ஞான உண்மையை நம் முன்னோர்கள் அறிந்திருந்தால்தான் அவர்கள் ஆலய கருவறையை சற்று இருளாக இருக்கும்படி செய்தனர். அது மட்டுமின்றி அந்த இறை ஆற்றல்களைப் பெற தினமும் ஆலயங்களுக்கு செல்ல வற்புறுத்தினார்கள்.

ஆனால் நம்மில் பெரும்பாலானவர்கள் கருவறையின் ஆற்றல்களையும் அருமையையும் புரிந்து கொள்ளாமலே இருக்கிறோம். நாம் வீட்டில் வழிபட்டால் 10 சதவீத ஆற்றலே கிடைக்கும். கோவில் பிரகாரத்தில் வழிபட்டால் 100 சதவீத ஆற்றல் பெறலாம்.

குளத்தில் வழிபட்டால் 1000 மடங்கு பலனும் ஆற்றில் வழிபட்டால் இலட்சம் பங்கு பலனும் அருவிக்கரை பகுதிகளில் வழிபட்டால் ஒரு கோடி பங்கு பலனும் கடற்கரையில் வழிபட்டால் 2 கோடி பங்கு பலனும் ஜீவசமாதிகளில் வழிபட்டால் 10 கோடி பங்கு பலனும் கிடைக்குமாம்.

ஆனால் ஆலயக் கருவறை முன்பு நாம் வழிபாடு செய்தால் பலநூறு கோடி அளவுக்கு ஆற்றல்களைப் பெற முடியுமாம். இதில் இருந்தே நாம் கருவறை முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளலாம். எல்லா இடங்களிலும் காந்த அலைகள் இருந்தாலும் கருவறையில்தான் அவை நமக்கு ஆற்றல் தரும் சக்தியாக மாறுகிறது என்பதை யாராலும் மறுக்க முடியாது. இதைக் கருத்தில் கொண்டே கருவறை எல்லா பக்கமும் மூடப்பட்டுள்ளது. (தொடரும்)

# செய்தித்துளிகள்

## கைதிகள் தப்பியோட்டம் ஒருவர் உயிரிழப்பு

(கண்டி)

கண்டி போகம்பறை சிறைச்சாலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 5 கைதிகள் தப்பிச் செல்ல முயற்சித்த போது 3 பேர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

மேலும் ஒருவர் தப்பியோடியுள்ளதாகவும் அவரைக் கைது செய்யும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

குறித்த சிறைச்சாலையில் 800 இற்கும் அதிகமான கைதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அதில் 30 கைதிகள் மற்றும் இரு அதிகாரிகளுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## 381 பேர் நாட்டிற்கு




(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று அச்சம் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 381 இலங்கையர்கள் நாடு திரும்பினர்.

அதன்படி ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து 289 பேரும் டுபாயிலிருந்து 55 பேரும் மாலைதீவிலிருந்து 29 பேரும் இந்தியாவிலிருந்து 7 பேரும் கட்டாரிலிருந்து ஒருவரும் நேற்று நாட்டை வந்தடைந்தனர்.

இவ்வாறு நாட்டை வந்தடைந்த அனைவருக்கும் விமான நிலையத்தில் வைத்து பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அதன் பின்னர் அனைவரும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். (ஜ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 170 | 160 |
| உருளைக்கிழங்கு | 160 | 180 | 180 |
| பச்சைமிளகாய் | 180 | 160 | 150 |
| தக்காளி | 120 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 90 | 60 |
| கோவா | 60 | 80 | 100 |
| கரட் | 120 | 200 | 200 |
| பூசணி | 80 | 60 | 80 |
| புடோல் | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 60 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 280 | 240-300 | 300 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 200 |
| பாகற்காய் | 300 | 280 | 280 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 |
| பயற்றங்காய் | 320 | 240-260 | 240 |
| லீக்ஸ் | 80 | 100 | 100 |
| பீற்றூட் | 80 | 80 | 100 |
| கறிமிளகாய் | 250 | 280 | 240 |
| முருங்கைக்காய் | 250 | 200 | 200 |
| போஞ்சி | 250 | 200 | 240 |
| கத்தரிதம்புள்ள | 200 | 170 | 140 |
| கீரை - 1 பிடி | 60 | 70 | 60 |
| தேசிக்காய் | 200 | 180 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 80 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 150-200 | 240 |
| வெங்காயப்பூ | — | — | — |
| முள்ளங்கி | 80 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | — | 120 |




# பலமும் பயமும்

சிங்கம் ஒன்று காட்டு வழியே நடந்து வந்து கொண்டிருந்தது. அதற்குச் சேவல் கூவும் ஒலியைக் கேட்டால் போதும் மிகவும் பயந்து விடும்.

நான் காட்டரசனாக மிகுந்த பலத்துடன் இருந்து என்ன பயன்? ஒரு சேவல் கூவுவதைக் கண்டு பயந்து வாழ்வது ஒரு வாழ்வா? என்று தனக்குத்தானே மிகவும் நொந்து கொண்டே இருந்தது.


அப்போது எதிரே ஒரு யானை மிகவும் சோர்வுடன் தனது காதுகளை இரு பக்கமும் வேகமாக ஆட்டிக் கொண்டே வந்தது.

அதனைக் கண்ட சிங்கம், யானையாரே, மிகப் பெரிய உருவம் கொண்ட உமக்கு என்ன கவலை? ஏன் வாட்டமாக வருகிறீர்? என்று கேட்டது.

சிங்க நண்பரே, அதை யேன் கேட்கிறீர்? எனக்கு நிம்மதியே இல்லாமல் போய் விட்டது. இதோ எனது காதுகளின் பக்கத்தில் குளவி ஒன்று பறந்துகொண்டே இருக்கிறது.

அது காதுக்குள் நுழைந்து கொட்டிவிட்டால் அந்த வலியைத் தாங்க முடியாது. அந்தக் குளவி காதிற்குள் நுழைந்து விடக் கூடாதே என்ற கவலையுடன் காதுகளை ஆட்டிக் கொண்டே வருகிறேன் என்று கூறியது யானை.

எத்தகைய வல்லமை உள்ள உயிருக்கும் கூட அதுக்குன்னு ஒரு கவலை நிச்சயம் உண்டு.



அதுபோலத் தான் நமக்கும் என்று உலக வழக்கத்தைப் புரிந்து கொண்டு அதிலிருந்து எதற்கும் கவலைப்படாமல் மகிழ்ச்சியுடன் சிங்கம் வாழ ஆரம்பித்தது.

**நீதி : பயம், பலவீனம் இரண்டும் மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும் பொதுவானது.**

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## முதல் வெற்றி




நள்ளிரவில் கலவரம் தொடங்கியது. நேராக மாசிடோனியாவுக்குள் புகுந்து கோட்டை முதல் குளக்கரை வரை அத்தனையையும் கைப்பற்ற வேண்டும் என்பதுதான் கலவரக்காரர்களுக்கு விடுக்கப்பட்டிருந்த செய்தி.

பல பொதுச் சொத்துக்கள் தீ வைக்கப்பட்டன. வீடுகள் கொள்ளை போகத் தொடங்கின. எங்கு பார்த்தாலும் வன்முறை, தகராறு.

விடயம் அலெக்சாண்டருக்குத் தெரிவிக்கப்பட்டது. அடுத்து என்ன செய்வது? என்று எல்லோரும் குழம்பிப் போய் நின்று கொண்டிருக்க, அலெக்சாண்டர் மாத்திரம் கொஞ்சமும் பதற்றமில்லாமல் இருந்தார்.

ஆஹா, என்ன ஒரு அற்புதமான வாய்ப்பு. இதற்காகத்தானே இத்தனை நாள் காத்துக் கொண்டிருந்தேன். அலெக்சாண்டரின் சிரிப்பு அரண்மனைச் சுவர்களில் எதிரொலித்தது.

அமைச்சர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. தளபதிகள் திகைத்துப் போய்ப் பார்த்தார்கள். எவ்வளவு பெரிய ஆபத்து காத்திருக்கிறது. மன்னர் வேறு நாட்டில் இல்லை.

இவர் என்னடா என்றால், கொஞ்சமும் கவலைப்படாமல் அற்புத வாய்ப்பு என்று சொல்லிச் சிரித்துக்கொண்டிருக்கிறார். என்னதான் இருந்தாலும் சிறுபிள்ளை தானே.

தவறுதலாகக்கூட யாருக்கும் கேட்டுவிட முடியாத அளவுக்குக் கம்மிய குரலில் பேசிக் கொண்டார்கள். இல்லை. முனகினார்கள் என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும்.

அலெக்சாண்டர் அடுத்து என்ன செய்யப் போகிறார்? இதுதான் எல்லோருடைய மனத்தையும் குடைந்து கொண்டிருந்த கேள்வி.

ம்... படைகள் தயாராகட்டும். மேடி நாட்டை நோக்கி விரைந்து செல்லட்டும். உரத்த குரலில் உத்தரவிட்டார் அலெக்சாண்டர்.

இளவரசரே சொல்லி விட்டார். இதற்கு மேல் யோசிக்க நேரமில்லை. கூடவும் கூடாது. அது ராஜ துரோகம். மேடி நாட்டை நோக்கி மின்னல் வேகத்தில் புறப்பட்டன மாசிடோனியப் படைகள்.

கலவரக்காரர்கள் மீது அதிரடித் தாக்குதல் நடத்துவது அதன்மூலம் அவர்களை நிலைகுலைய வைப்பது. இரண்டும் தான் அலெக்சாண்டரின் திட்டங்கள். அதற்குச் சரியான தேர்வு குதிரைப்படைதான். முடிவு செய்தார் அலெக்சாண்டர். (தொடரும்)

எப்போதும் தோல்வியைப்பற்றி நினைத்தால் தோல்வி நம்முடையதாகி விடுகிறது! எதையும் தீர்மானிக்காமல் இருந்தால் எந்த மாற்றமும் ஏற்படாது. *– மகரிஷி மகேஷ்யோகி*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பாதீடு கற்றுத் தரும் பாடம் கந்தறு நிலையில் நாடு

2021ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தை (பாதீடு) நேற்று முன்தினம் பிரதமரும் நிதியமைச்சருமாகிய மகிந்த ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

அவர் சமர்ப்பித்த 2021ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டம் நாட்டு மக்களுக்கு தரப்போகும் நன்மை என்ன என்று கேட்டால் எதுவுமில்லை என்பதுதான் பதில்.

2021ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டம் 2020ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்டு பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெறுகின்ற சம்பிரதாயம் நடந்தேறியுள்ளது.

அவ்வளவுதான் என்பதோடு அதனை நிறுத்திக் கொள்வதுதான் பொருத்தம் போலத் தெரிகிறது.

குறித்த வரவு–செலவுத் திட்டத்தை பார்க்கும்போது ஒரு விடயம் ஞாபகத்துக்கு வருகிறது.

முன்பெல்லாம் வரவு–செலவுத் திட்டம் நள்ளிரவு வேளையில்தான் வாசிக்கப்படும்.

ஒருமுறை நிதியமைச்சர் சமர்ப்பித்த வரவு–செலவுத் திட்டத்தில் பொருட்களின் விலைகள் உயர்த்தப்பட்டிருந்தன.

அதிலும் குறிப்பாக உணவுப் பொருட்களின் விலைகளில் அதிகரிப்புச் செய்யப்பட்டிருந்தன.

இது தொடர்பில் அப்போது வெளிவந்து கொண்டிருந்த ஈழநாடு பத்திரிகையின் ஆசிரியர் சபாரட்ணம் மாஸ்ரர் அவர்கள் **நள்ளிரவில் நட்டம் பயின்றானே** எனத் தலைப்பிட்டு ஆசிரியர் தலையங்கம் வரைந்திருந்தார்.

அதில் பொருட்களின் விலையேற்றத்தால் மக்கள் நட்டத்தையும் கஷ்டத்தையும் தலையில் சுமக்கப் போகின்றனர் எனும் கருத்தைப் பதிவு செய்திருந்தார்.

அன்று அவர் எழுதிய ஆசிரியர் தலையங்கமே இப்போது நம் நினைவுக்கு வருகிறது.

இவை ஒருபுறமிருக்க, மிகப்பெரும் படோபகாரத்துடன் ஆட்சிப்பீடமேறிய ராஜபக்ஷ அரசாங்கத்தின் வரவு–செலவுத் திட்டம் இத்துணை தூரம் பெறுமதி இழந்ததாக இருக்கும் என எவரும் எதிர்பார்த்திருக்கவில்லை.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மகிந்த ராஜபக்ஷவே நிதியமைச்சர்.

ஆக, 2021ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்டத்தில் மக்கள் நலன் சார்ந்த திட்டங்கள், முதலீட்டுக்கான சலுகைகள், சம்பள அதிகரிப்புகள், பயிற்சித் திட்டங்கள் என ஏகப்பட்ட விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அவை எதுவும் வரவு–செலவுத் திட்டத்தில் இல்லை.

எதையும் பகட்டாகச் செய்ய வேண்டும் என்ற நினைப்போடு செயற்படுகின்ற ராஜபக்ஷ தரப்பால் 2021ஆம் ஆண்டுக்கான பாதீட்டை அபிவிருத்திக்கான பாதீடாக முன்வைக்க முடியாமல் போனமைக்குக் காரணம் என்ன என்று ஆராய்ந்தால், நாடு கந்தறுந்த நிலையில் இருப்பதுதான் இவற்றுக்கெல்லாம் காரணம் என்பதைக் கண்டறிய முடியும்.

அதாவது ஜனாதிபதியாக, பிரதமராக, நிதியமைச்சராக யாரும் இருக்கலாம்.

ஆனால் வரவு–செலவுத் திட்டம் என்று வரும்போது அதனைத் தயாரிப்பதில் பொருளியல் சார் விடயங்கள் முன்னெழவே செய்யும்.

அந்த விடயங்களை ஒதுக்கி வைத்துவிட்டு, தாம் நினைத்தபடி வரவு–செலவுத் திட்டத்தை தயாரிக்க முடியாது என்பதே உண்மை.

இந்த அடிப்படையில் நாட்டின் சமகால பொருளாதார நிலைமை ஆரோக்கியமாக இல்லை என்பதையே 2021ஆம் ஆண்டின் பாதீடு கட்டியம் கூறி நிற்கிறது.

# யாழ்.பல்கலை மாணவர்களுக்கிடையில் கடந்த மாதம் இடம்பெற்ற மோதல் சம்பவம்

## 3 பேருக்கு 1 வருடத் தடை 4 பேருக்கு 6 மாதங்கள் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத்தில் கடந்த மாதம் 8 ஆம் திகதி மாணவர்களுக்கிடையில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் விசாரிப்பதற்கு அமைக்கப்பட்ட தனிநபர் விசாரணை ஆயத்தின் சிபார்சுக்கமைய, சம்பவத்துடன் தொடர்புடைய மாணவர்களுக்குக் கடுமையான தண்டனைகளை வழங்குவதற்கு பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபை பரிந்துரை செய்துள்ளது.

இதனடிப்படையில், நேரடியாகக் குற்றங்களில் ஈடுபட்ட, பல்கலைக் கழகத்தின் பெயருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்ட மூன்றாம் வருட மாணவர்களுக்கு அவர்கள் செய்த குற்றங்களின் தன்மைக்கேற்ப பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 946 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் அடிப்படையில் விசாரணை அதிகாரியினால் வகைப்படுத்தப்பட்ட தண்டனைகள் சிபார்சு செய்யப்பட்டிருந்தன. அவரது முன்மொழிவுகளைப் பேரவைக்குச் சிபார்சு செய்வதென நேற்று புதன்கிழமை இடம்பெற்ற பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் வருட மாணவர்கள் 3 பேருக்கு ஒரு வருட காலத்துக்குப் பல்கலைக்கழகத்துக்குள் நுழைவதற்கான தடையும், 4 பேருக்கு ஆறு மாத காலத்துக்குப் பல்கலைக்கழகத்துக்குள் நுழைவதற்கான தடையும் விதிக்கப்படுவதோடு, தண்டனைக்குரிய 7 பேருக்கும் வழங்கப்படும் அத்தனை நிதியுதவிகளும் நிறுத்தப்படல் வேண்டும். கல்வி கற்கும் காலத்தினுள் விடுதிகளில் தங்குவதற்கான வாய்ப்பு மறுக்கப்பட வேண்டும். மாணவர் சங்கங்கள் மற்றும் ஒன்றியங்களில் பதவிகள் எவையும் வழங்கப்படக் கூடாது போன்ற தண்டனைகள் விசாரணை அதிகாரியினால் சிபார்சு செய்யப்பட்டிருந்தன.

எனினும் இவற்றில் மாணவர்களுக்கான நிதியுதவிகளை நிறுத்துவதை தவிர ஏனைய சிபார்சுகளைப் பேரவைக்குப் பரிந்துரைப்பதற்கு பல்கலைக் கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபை முடிவு செய்துள்ளது. (ம-03-33)

## பொது மக்கள் பச்சை மீனை உட்கொள்ள வேண்டாம்

### மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

மக்கள் பச்சை மீனை உட்கொள்ள வேண்டாம் என அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

எவ்வாறெனினும், நன்கு சமைத்த மீனை உட்கொள்வதில் எவ்வித சுகாதார பிரச்சினையும் ஏற்படப் போவதில்லை என அறிவித்துள்ளது.

கோவிட் தொற்று பரவக்கூடும் என்ற அச்சத்தினால் மீன் உட்கொள்வது வெகுவாக குறைவடைந்துள்ளது.

மீன் விற்பனையை ஊக்குவிக்கும் நோக்கில் பாராளுமன்ற உறுப்பினர் திலிப் வெதாராச்சி நேற்றுமுன்தினம் பச்சை மீனை செய்தியாளர் சந்திப்பில் வைத்து உட்கொண்டார்.

எனினும், இவ்வாறு பச்சை மீனை உட்கொள்ள வேண்டாம் எனவும் நன்கு சமைத்த மீனை உட்கொள்வதில் பிரச்சினை கிடையாது எனவும் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது. (ம-3)

## கொழும்பை முடக்கோம்

(கொழும்பு)

கொழும்பை முடக்க வேண்டிய அவசியமில்லை என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலை கோவிட் 19 தொடர்பான செயலணி நாளாந்தம் உன்னிப்பாக அவதானித்து ஆராய்ந்து வருகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் ஏற்கனவே முடக்கப்பட்டுள்ள பகுதிகளில் இருந்தே கொரோனா வைரஸ் நோயாளிகள் அடையாளம் காணப்படுகின்றனர் என்றும் முடக்கப்படாத பகுதிகளில் இருந்து எவரும் அடையாளம் காணப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-03)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற் றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**கிளிநொச்சி பிரதேசத்தில்** புதிய கொலனி, பனிக்கன்குளம், கிழவன் குளம், மாங்குளம், மாங்குளம் நீதிமன்றம் ஆகிய இடங்களிலும்


**வவுனியா பிரதேசத்தில்** நெளுக்குளத்திலிருந்து இராஜேந்திரகுளம் வரை, கூமாங்குளத்திலிருந்து நொச்சிக்குளம் வரை, நீர்ப்பாசன சபை நெளுக்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின் சாரம் தடைப்படும்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2020

**“உலகில் உள்ள கானகங்களுக்கு நாம் இழைத்திடும் கொடும் செயல்கள் நாம் நமக்குள் ஒருவருக்கொருவர் இழைத்திடும் கொடும் செயல்களின் பிரதிபலிப்பே.”**

*-மகாத்மாகாந்தி (இந்தியதேசபிதா)*

## சத்திய தரிசனம்



### நல்லதைப் பின்பற்றுங்கள்

❖ சோதனை நேர்ந்தால் முயற்சியைக் கை விடுவது கூடாது. எல்லாம் நன்மைக்காகவே நடக்கிறது என்று மன உறுதியுடன் கடமைகளைச் சரிவரச் செய்ய முற்பட வேண்டும்.

❖ நீங்கள் செய்யும் ஒவ்வொரு செயலையும் மற்றவர்கள் பாராட்ட வேண்டும் என்று எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டாம். உங்களுக்கு நீங்களே உற்ற நண்பனாக இருங்கள்.

❖ படிப்புக்காகவோ, செல்வத்திற்காகவோ கர்வம் கொள்ளக்கூடாது. நாம் பெற்ற கல்வி, செல்வம் மற்றவர்களுக்கு பயன்படுவதாக இருக்கட்டும்.

❖ ஒரு மனிதனை சூழ்நிலை தான் உருவாக்குகிறது என்று நினைக்கிறார்கள். ஆனால், அவனுடைய மனமே அதைவிட முக்கியக் காரணியாகும்.

❖ எல்லா ஆசைகளையும் இறைவனிடமே அர்ப்பணித்து விடுங்கள். மனதைச் சமநிலையில் வைக்க நல்லதைப் பின்பற்றுங்கள்.

# வரவு-செலவுத்திட்ட உரை- 2021



**வெறுமனே இறக்குமதி மீது தங்கியிருக்கின்ற பொருளாதாரமொன்றுக்குப் பதிலாக விவசாய பண்ணை உற்பத்தி மற்றும் விவசாய கைத்தொழில் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருளாதாரமே மக்களின் எதிர்பார்ப்பாகும்.**

**2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை நேற்று முன்தினம் நிதி அமைச்சர் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பாராளுமன்றில் சமர்ப்பித்து ஆற்றிய உரை இங்கு பிரசுரமாகின்றது.**

ஜனாதிபதி கோட்டாபயவின் அரசாங்கத்தினது "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைச் சட்டகத்திற்குள் 2021 - 2023 நடுத்தர கால பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்பினைத் துரிதப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தினை பலப்படுத்துகின்ற 2021 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட உரையினை இந்த உயர் சபைக்கு சமர்ப்பிப்பதனையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது நாடு, எத்தகைய பொருளாதார மட்டத்தில் காணப்பட்ட போதிலும், எத்தகைய சவால்களை எதிர்நோக்கிய போதிலும், நாம் அறிந்து கொள்ள வேண்டிய உண்மை யாதெனில், கைத்தொழில் மயமாக்கலின் மூலம் வெற்றியடைந்த உலகப் பொருளாதாரம், தொழில்நுட்பப் பொருளாதாரத்தினை நோக்கி மாற்றமடைந்துள்ளது என்பதுவாகும். விவ்சாயம், கைத்தொழில் மற்றும் சேவைத் துறைகளின் அபிவிருத்திக்காக பாரம்பரிய வழிமுறைகளுக்கு அப்பால் தொழில்நுட்ப ரீதியாக இத் துறைகளை ஒருங்கிணைத்து, உற்பத்தி மற்றும் வழங்கல் செயற்பாடுகளை நோக்கிச் செல்கின்ற சந்தர்ப்பமொன்றாக, கொள்கை வகுப்பாளர்கள் என்ற வகையில் நாம் இதனைப் பார்க்க வேண்டியுள்ளது.

எமது நாட்டின் பொருளாதார அபிவிருத்தியினைத் திட்ட மிடுகின்ற போது நாம் கவனத்திற்கொள்ள வேண்டியது உயிரியல் பல்வகைத்தன்மையுடைய வளமான, தேசிய மரபுரிமைகளைக் கொண்ட மற்றும் கலாசார விழுமியங்களுடன் கூடிய நீண்ட வரலாற்றினைக் கொண்ட விசேட அடையாளங்களுடன் கூடிய சூழல் நட்புடைய நிலையான அபிவிருத்திக்கு அர்ப்பணிப்புடைய நாடொன்று என்பதுடன் சமூகமொன்றுமாகும்.

இயற்கை வனப்பு, வன ஜீவராசிகள், நதிகள், ஆகிய வற்றினாலும் எமது நாட்டினைப் போன்று பெருமளவிலான சமுத்திர வளங்களையும் தன்னகத்தே கொண்ட நாடு என்பதனால் எமது தேசிய உற்பத்தி செயற்பாடுகளை ஒப்பீட்டு ரீதியில் நன்மைதரும் வகையில் அமைத்துக்கொள்ள வேண்டியது அவசியமானதாகும்.

எமது நாட்டின் பூகோள மைய அரசியல் முக்கியத்துவத்தை பல நாடுகளும் உணர்ந்திருக்கின்ற ஒரு காலகட்டத்தினுள் நாம் இருக்கின்றோம். எமது அண்டை நாடாகிய இந்தியா அடுத்து வரக்கூடிய ஒரு சில தசாப்த காலப்பகுதியில் உலகிலேயே பலம்பொருந்திய பொருளாதாரத்தைக் கொண்ட நாடாக விளங்கும் என்பதுடன்,இதற்கு மேலதிகமாக சீனா உள்ளிட்ட ஏனைய சில ஆசிய நாடுகளும் உலகப் பொருளாதாரத்தில் பலம் பொருந்திய ஐந்து நாடுகளுக்குள் விளங்கும் என்பதே எனது நம்பிக்கையாகும்.

உயர் உற்பத்தி மற்றும் வருமான வளர்ச்சியைக் கொண்டுள்ள எம்மை அண்மித்த ஆசிய சந்தை, உலக சனத்தொகையில் 60 சதவீத பொருளாதார வலயமொன்றாகும். இப் புதிய உலகப் பொருளா தாரத்தில் சம்பிரதாய மேற்குலக வல்லரசுகளும் அதேபோன்று கிழக்கில் வளர்ந்து வருகின்ற பொருளாதாரங்களினதும் கேந்திர நிலையமாக எமது நாட்டிற்குள்ள அபிவிருத்தி வாய்ப்புகளுக்காக எமது தேசிய கொள்கைகளை வகுப்பதற்கு நல்ல சந்தர்ப்பம் தோன்றியுள்ளதென்பதை நான் நம்பு கிறேன்.

கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகங்களையும் விமான நிலையங்களையும் இவ் வர்த்தக தொழிற்பாட்டின் மத்திய நிலையங்களாக மாற்றிக் கொள்ளக் கூடியவாறு நாம் எமது அபிவிருத்தி உபாய முறைகளையும் வழி முறைகளையும் திட்டமிடுதல் வேண்டும்.

ஜனாதிபதியினால் பாராளுமன்றத்தில் முன்வைத்த இரண்டு கொள்கைப் பிரகடனங்களினூடாக சுட்டிக்காட்டிய பொருளாதாரக் கொள்கை யாதெனில், "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைத் திட்டத்தினூடாக நாட்டு மக்கள் எதிர்பார்த்த, எல்லோருக்கும் நன்மை பயக்கும் எமக்கே உரித்தான பொருளாதார அபிவிருத்தியொன்றை ஏற்படுத்துவதாகும்.

வருமான ஏற்றத் தாழ்வு, பிரதேச ஏற்றத்தாழ்வு அதே போன்று நகர மற்றும் கிராமிய வேறுபாடு என்பனவற்றினை இயன்றளவில் குறைத்து அபிவிருத்தியை நோக்கி பயணிப்பதே இதன் கருத்தாகும்.

எமது சமூக அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் அடிப்படை நோக்கம் என்னவெனில், கொவிட் - 19 உள்ளிட்ட தொற்று நோய்களிலிருந்தும், அதிகரித்த மட்டத்தில் காணப்படுகின்ற தொற்றா நோய்களிலிருந்தும் மக்களைக் காப்பாற்றி தொடர்ந்தும் இலவச சுகாதார சேவையை விஸ்தரித்து, பொதுமக்களுக்கு சுகாதார சேவையை வழங்குவதாகும்.

தேக ஆரோக்கியமுள்ள மக்கள் அதேபோன்று ஒவ்வொரு பிள்ளையும் சிறந்த பிரஜை என்ற வகையில் தமது ஆற்றல்களையும் திறமைகளையும் வெளிக்கொணரக் கூடிய கல்வித் திட்டமொன்றினூடாக மனித வளங்களை உயர்ந்த மட்டத்தில் பேணிச் செல்வது மனித வள அபிவிருத்தியின் மற்றுமொரு நோக்கமாகும்.

சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார முயற்சிகளில் இளைஞர்களின் பங்களிப்பினைப் பெற்றுக் கொள்வதற்கும் விளையாட்டு நேய சமூகமொன்றின் கீழ் புறக்கிருதி செயற்பாடுகளில் அவர்களை ஈடுபடுத்துவதற்கும் ஆரோக்கியமான சிறுவர் மற்றும் இளைஞர்களை உருவாக்கும் வகையில் கல்வி மற்றும் விளையாட்டுத் துறைகளில் அபிவிருத்தியின்பால் எமது முயற்சிகள் அனைத்தையும் ஒன்று சேர்ப்பதற்கான தேவை ஏற்பட்டுள்ளது.

பல்கலைக்கழகக் கல்வியினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்கின்ற திறமையான மாணவர்கள் இறுதியில் தொழில் வாய்ப்பற்று காணப்படுவார்களாயின், தேவையான மறுசீரமைப்புகளை மேற்கொண்டு கல்வி முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கப்படுதல் வேண்டும்.

எமது சமூகத்தில் வாழும் பாதிக்கப்பட்டவர்கள், முதியோர்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கான சமூக நலன்புரி மற்றும் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துவது "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கையில் ஏற்று க் கொள்ளப்பட்ட அடிப்படை விடயமாகும்.

சுகாதாரம் கல்வி, விளையாட்டு மற்றும் சமூகப் பாதுகாப்பு என்பன மனிதவள அபிவிருத்தியில் ஒருங்கிணைந்த பகுதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

மக்கள் தேவைகளை நிறைவேற்றும் போது நவீன தொடர்பாடல்களும் தொழில்நுட்பங்களும் இன்று பிரதான உட்கட்டமைப்பு தேவைகளாக விளங்குகின்றன.

குடிநீர், நீர்ப்பாசனம், வீதி, மின்சாரம், வங்கிமற்றும் பண வசதிகள் என்பன இதற்குத் தேவையான மேலதிக வசதிகளாகக் காணப்படுகின்றன. கஷ்டமான வாழ்வைக் கழிக்கும் விவசாயிகள், மீனவர்கள், பாரம்பரிய கைத் தொழில்களில் ஈடுபடுவோர், சுய தொழிலில் ஈடுபடுவோர், மனைப் பொருளாதாரத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ள குறைந்த வருமானம் பெறுவோர் மற்றும் பல்வேறு சிரமங்கள் காரணமாக நிரந்தர வருமானம் இல்லாதவர்கள், பணம், தொழில்நுட்பம் மற்றும் சந்தை வாய்ப்புகளை பெற்றுக் கொள்ள முடியாத சிறிய வியாபாரிகள் முதலானோரை வலுவடையச் செய்வதே அரசாங்கத்தின் பிரதான் பொறுப்பாகும்.

இவர்களிடம் மறைந்து காணப்படுகின்ற உற்பத்திக் கொள்ளளவை தேசிய உற்பத்தியின் பிரதான காரணியாக ஆக்கிக் கொள்வதன் மூலம் வறுமை நிலையிலிருந்து மீண்டு அபிவிருத்தியை நோக்கிச் செல்வதற்கு சாதகமாக அமையும்.

வெறுமனே இறக்குமதி மீது தங்கியிருக்கின்ற பொருளாதாரமொன்றுக்குப் பதிலாக விவசாய பண்ணை உற்பத்தி மற்றும் விவசாய கைத்தொழில் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருளாதாரமே மக்களின் எதிர்பார்ப்பாகும் என்பதை "கம சமக பிலிசந்தரக்" மக்களுடனான சந்திப்பின்போது நாம் விளங்கியிருக்கிறோம்.

இயற்கை வளங்களை அபிவிருத்திக்குப் பயன்படுத்தும் போது, அவற்றை கூருணர்வுடனும் அதேபோன்று மேலும் விருத்தி செய்யும் வண்ணமுமே பயன்படுத்தவேண்டும் என்பதே "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தை உயர் சபையில் முன்வைத்து ஜனாதிபதியால் சுட்டிக் காட்டப்பட்டு, நிலைபேறான அபிவிருத்தியின் முக்கியத்துவம் எடுத்துக்காட்டப்பட்டது.

அரசாங்கத்தின் பணிகளை நிறைவேற்றும் போது சிக்கல் நிறைந்த நிருவாக முறைக்குப் பதிலாக கீழ் மட்ட நடவடிக்கைகளுக்கு முதலிடம் வழங்குகின்ற மக்களை மையப்படுத்திய அரச சேவையொன்றின் தேவை மக்கள் சந்திப்பின் போது நாம் இனங்கண்டுள்ளோம்.

கடந்த அரசாங்கத்தினைப் போன்றல்லாது அரசாங்க சேவையைக் கண்டிக்காது அதனை அவமதிக்காது, வெளிப்படையாக, குறைந்த செலவிலும் வினைத்திறனுடனும் செயலாற்றுவதற்கு அரசாங்க சேவைக்குத் தேவையான சூழலை அமைக்க வேண்டியுள்ளது.

தூய எண்ணத்துடன்சேவையாற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களை அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்படுத்துவதை நாம் கண்டித்தேயாக வேண்டும். வருடக் கணக்கில் இழுத்தடிக்கப்படுகின்ற வழக்குகள், செயற்றிறனற்ற மற்றும் காலங் கடந்த சட்ட திட் டங்கள் மற்றும் தாபனக் கட்டமைப்பு முதலானவற்றை மறுசீரமைத்த வண்ணம்மக்களையும்அதேபோன்று வியாபாரிகளையும் ஊக்குவிக்கின்ற சூழலொன்றை அமைப்பதற்கு நாங்கள் முதலிடம் கொடுக்க வேண்டியுள்ளது.

## பேரண்டப் பொருளாதாரத்தை நோக்கிய பயணம்

"சுபீட்சத்தின் நோக்கு" பேரண்டப் பொருளாதார வேலைத் திட்டத்திற்கமைய சமூகத்திலுள்ள எல்லா தரப்புகளுக்கும் நன்மை கிடைக்கக் கூடிய 6 சதவீதத்தை தாண்டிய மத் திய கால பொருளாதார வளர்ச்சியொன்றைப் பேணுவதே எமது இலக்காகும்.

விலையில் ஸ்திரத் தன்மையை ஏற்படுத்திய வண்ணம் 5 சதவீத பணவீக்க வேகத்தை பேணிச் சென்று வாழ்க்கைச் செலவை கட்டுப்படுத்த வேண்டியுள்ளது. நிலையான வட்டி மற்றும் அந்நியச் செலாவணி வீதம், வரிக் கொள்கை, வங்கி மற்றும் நிதி வசதிகள் மற்றும் நிறுவன தொழிற்பாடு மற்றும் பொருட்கள், சேவைகள், வழங்கல் ஆகியவற்றை ஊக்குவிக்கின்ற விதத்தில் வழிநடாத்த வேண்டியுள்ளது.

தனியார் பொருளாதார சுதந்திரத்தை உறுதிப்படுத்திய வண்ணம் உற்பத்திப் பொருளாதாரமொன்றை உருவாக்குவதற்கு அரசாங்கம் வசதிசெய்கின்ற கட்டமைப்பு மாற்றமொன்றைச் செய்வது வேலைத்திட்டத்தின் பிரதான உபாய வழியாக இருக்கும்.

(தொடரும்)

## மாவீரர் நாளை...

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"உயிரிழந்த குடும்ப உறுப்பினர்களை நினைவுகூருவதனை யாரும் தடுக்க முடியாது. அதேபோல எமது குடும்ப உறுப்பினர்களை நினைவுகூருவதற்கு நாம் யாரிடமும் அனுமதியும் பெறத் தேவையில்லை.

எனவே மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வு வழமைபோல் இடம்பெறும். எத்தடைவரினும் அத்தடையை உடைத்து மக்கள் அனைவரும் தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்ப ஒன்றுகூடி இந்த மாவீரர் தின நிகழ்வை நடத்துவோம்.

எம்மைக் கைது செய்தால் கைது செய்யட்டும். ஆனால் மாவீரர் நாள் நிகழ்வை நடத்துவோம்" என்றார். (ம-3)

(மற்றுமொரு செய்தி உள்ளே)

## குடியிருப்பு திட்டம்...

தற்கான ஆரம்ப நடவடிக்கைகள் நேற்று நடைபெற்றுள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் பிறந்த நாளான நேற்று நவம்பர் 18ஆம் திகதி இந்த வீட்டுத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நாடு முழுவதும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளர் க.மகேசன், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்ப்பாணம் மாவட்ட முகாமையாளர் மு.ரவீந்திரன், சாவகச்சேரி பிரதேச செயலாளர் திருமதி எஸ்.உசா, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், மதத் தலைவர்கள், அரசியல் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (ம-3)

## பணப்பரிமாற்ற...

யம் காணப்படுவதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் சி.யமுனாநந்தா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கோப்பாய் கல்வியியற் கல்லூரி கொரோனா சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்று வரும் சில நோயாளிகள் வளாகத்தில் உள்ள மதில் ஊடாக சமூகத்தில் நடமாடும் நபர்களிடம் பணம் கொடுத்து மதுபானம் வாங்க முயற்சித்த செயற்பாடொன்று அவதானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பணப்பரிமாற்றமூடாக சமூகத்தில் உள்ளவர்களிடம் கொரோனா பரவ அதிக வாய்ப்பு உள்ளது.

இவ்வாறான சமூக விரோத செயற்பாட்டினை கொரோனா நோயாளர்களும் அவர்களுக்கு உதவி புரியும் அயல் சமூகத்தினரும் உடன் நிறுத்த வேண்டும்.

தவறின் பாரிய பின்விளைவுகளை சந்திக்க நேரிடும் எனவும் யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் சி.யமுனாநந்தா எச்சரித்துள்ளார். (ம-3,4)

## முன்னணி தொடர்...

நாள் நினைவேந்தலை அனுட்டிப்பது தொடர்பாக நேற்று மாலை ஆராய்ந்துள்ள நிலையில் குறித்த கூட்டத்திலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கலந்து கொள்ளாமல் தவிர்த்தது.

இந்நிலையில் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த கட்சிகள் சில தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இந்தச் செயற்பாட்டிற்கு தமது கடுமையான கண்டனத்தை தெரிவித்திருக்கின்றனர். குறிப்பாக கட்டாயப்படுத்தி கல்யாணம் செய்து வைக்க முடியாது.

கஜேந்திரன்களின் உறுதியான தீர்மானம் என்ன என்பதை அறியுங்கள். அவர்களுக்காக ஒவ்வொரு கூட்டங்களிலும் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு காத்திருக்க முடியாது என பகிரங்கமாகவே கூறியுள்ளன. (ம-3)

## வயோதிபரின்...

நாகமணி பெருமாள் (வயது-76) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-3)

## கொரோனாவால்...

நேற்று வியாழக்கிழமை இரவு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் நாட்டில் கோவிட் - 19 நோயால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 69ஆக அதிகரித்துள்ளது.

கந்தானையைச் சேர்ந்த 70 வயதுடைய ஆண், கொழும்பு-12ஐச் சேர்ந்த 74 வயதுடைய பெண் மற்றும் கொழும்பு-13ஐச் சேர்ந்த 48 வயதுடைய ஆண் ஆகிய மூவரே கோவிட் - 19 நோயால் உயிரிழந்துள்ளனர். (ம-3)

## பயம் கொண்ட...

கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் இதுவரை இலங்கை மதிப்பில் 70 ஆயிரம் மில்லியனுக்கும் அதிகமான தொகையை செலவிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டு மக்களுக்கு நேற்று மாலை ஆற்றிய விசேட உரையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் உரையாற்றுகையில், "கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் சுமார் 69 இலட்சம் மக்கள் என்னை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்தனர்.

நாட்டை பாதுகாப்பதே அவர்களின் பிரதான கோரிக்கையாக அமைந்தது. குறுகிய காலப்பகுதியில் அதனை எம்மால் செய்ய முடிந்தது. தற்போது நாட்டு மக்கள் எவ்விதத்திலும் அச்சப்படத் தேவையில்லை.

வீழ்ச்சியடைந்திருந்த புலனாய்வுப் பிரிவை மறுசீரமைத்து அதற்கு மீண்டும் புத்துயிர் அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன்படி, எவ்விதத்திலோ நாட்டினுள் பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்க இருந்த வாய்ப்புகள் எம்மால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது" எனத் தெரிவித்துள்ளார். (ம-3)

## மாவீரர் தின நிகழ்...

நேற்றைய தினம் அனைத்துத் தமிழ்க் கட்சிக் கூட்டம் இடம்பெற்றது. இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அனைத்து தமிழ்க் கட்சிக் கூட்டத்தில் இரு முக்கிய விடயங்கள் பற்றி ஆராய்ந்தோம்.

அதாவது தமிழ் தேசியக் கட்சிகளின் ஒற்றுமை தொடர்பாகவும், மாவீரர் தின நிகழ்வுகளை நடத்துவது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

தமிழ்த் தேசிய கட்சிகளின் ஒற்றுமை தொடர்பில் தமிழ் தேசியத்தின் பால் உள்ள கட்சிகளின் தலைவர்களை அழைத்து பேசுவதென தீர்மானித்திருந்தோம்.

மாவீரர் தின நிகழ்வுகள் தொடர்பிலும் ஆராய்ந்தோம். அந்தந்த துயிலுமில்ல பொறுப்பாளர்களுடன் கலந்துரையாடுவதென தீர்மானித்தோம்.

கொரோனா வைரஸ் காலத்தில் மக்கள் பாதுகாப்பாக எவ்வாறு அஞ்சலி செலுத்த வேண்டும் என்பதனை அடுத்தவாரமளவில் அறிக்கை மூலம் வெளியிடுவோம்.

மாவீரர் தின நினைவேந்தல், இறந்த உறவுகளுக்கு மக்கள் அஞ்சலி செலுத்த வேண்டும் என்பதில் திட்டவட்டமாக உள்ளோம். மாவீரர் தின நிகழ்வுகளை தடையின்றி நடத்துவதற்கு தேவைப்பட்டால் அரசாங்கத்துடன் பேசுவோம், என்றார். (ம-3;33)

## கொரோனாவால் ஏற்பட்டுள்ள அழிவு மிக மோசமானது

### பிரதமர் மகிந்த

(கொழும்பு)

போரை விடவும் கோவிட் வைரஸ் தொற்றினால் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள அழிவு மிகவும் மோசமானது என பிரதமரும் நிதியமைச்சருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கோவிட்-19 வைரஸினால் ஏற்பட்ட அழிவுகள் போர் அழிவுகளை விடவும் மிக வும் பாரதூரமானது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

2015ஆம் ஆண்டின் பின்னர் பின் தள்ளப்பட்டுள்ள இந்த நாட்டை மீளக் கட்டியெழுப்பும் பொறுப்புடன் கொவிட்-19 அனர்த்தத்தையும் வெற்றி கொள்ள வேண்டிய சவால் ஏற்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## + 325...

கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், நாட்டில் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 18 ஆயிரத்து 308ஆக அதிகரித்துள்ளது. (ம-3)


மெகா பவர்
திகதி 18/11/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0677
V 15 14 39 42 68

தன நிதானய
திகதி - 2020.11.18
சீட்டிழுப்பு இலக்கம் - 347
K 48 49 65 67

கொவிசெத
சீட்டிழுப்பு திகதி 18-11-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2605
K 16 26 33 75

மஹஜன சம்பத
திகதி 2020/11/18
சீட்டிழுப்பு இலக்கம் 4310
U 0 8 2 0 7 8

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1280
சீட்டிழுப்பு திகதி 18.11.2020
நிறம் செம்மஞ்சள்
தினம் புதன்
P 08 11 63 75
SUPER 500 9 0 5 4

சீட்டிழுப்பு வாரம் 27
சீட்டிழுப்பு திகதி 18/11/2020
வெற்றி இலக்கங்கள் 36 37 45
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,035,100/=

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 1106
சீட்டிழுப்பு திகதி: 18.11.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 84,715,265
25 31 41 60 E

சனிதா
சீட்டிழுப்பு இல: 3436
சீட்டிழுப்பு திகதி: 18.11.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 32,576,782
38 47 68 75 E 1007

ராசி
சுப்பர் ஜக்பொட் 25,08,170/=
திகதி: 18.11.2020
வெற்றி வாரம்: 2987
வர்ணம்: பச்சை
மீனம்
27 40 57 61
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 6,938,560

ஜயோதா
சீட்டிழுப்பு வாரம் 1708
சீட்டிழுப்பு திகதி 18/11/2020
01 54 64 66 C
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 56,085,200
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

## காணிகள் தேவை

- யாழ்ப்பாண மாநகர சபை பகுதிகளில்
- கோப்பாய் பிரதேச சபை பகுதிகளில்
- மானிப்பாய் பிரதேச சபை பகுதிகளில்

10 பரப்புக்கு மேலே காணிகள் தேவை.

( தரகர் தேவையில்லை. ) (4683)

**076 221 2037**


# இலங்கையில் தியாகிகள் என எவரும் இல்லை; யாப்பா எம்.பி



(கொழும்பு)

இலங்கையில் தியாகிகள் என எவரும் இல்லை, பயங்கரவாதிகளும் அவர்களை தோற்கடிப்பதற்காக போராடிய இராணுவத்தினரும் மாத்திரமே உள்ளனர் என பாராளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

சில தனிநபர்களின் நடவடிக்கையால் உயிர்கள் இழக்கப்பட்டமை குறித்து அரசாங்கம் கவலையடைகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஏனைய மக்களை பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்வதற்காக சிலர் எடுத்த நடவடிக்கைகள் குறித்து அரசாங்கம் கடும் சீற்றமடைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் தமிழ் மக்களிற்கு பல தீமைகளையே செய்தார் நன்மைகளையில்லை என அவர் தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்துள்ளார். (ம-03)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டை, நவாலி வீதி மெயின் றோட்டுடன் 6 பரப்புக் காணி விற்பனைக்கு உள்ளது.

1 1/2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.

( தரகர் தேவையில்லை. ) (4683)

( ஆனைக்கோட்டைச் சந்தியில் இருந்து 70 மீற்றர் தூரம்.)

**077 623 4204, 077 288 0152**

## குறைந்த கட்டணத்தில் ZOOM ஊடாக கணிதம்

தரம் 8,9,10 ஆகிய பிரிவுகளுக்கு

ஆரம்பம் : 22.11.2020

O/L PASS PAPERS நடைபெறுகின்றன.

**தொடர்பு : 077 113 0600** (C-722)

## விஞ்ஞான வகுப்புக்கள்

( தரம் 9 , 10 & 11 )

தனியார், குழு மற்றும் ஆன்லைன் மூலமாகவும் கற்பிக்கப்படும். (4674)

**தொடர்பு : 076 688 9449**

## திருமணம் நிட்சயித்தவர்களுக்கான GIRL FRIEND VISA

திருமணம் நடைபெறாமல் உங்களுடன் நிட்சயிக்கப்பட்டவர்களிடம் செல்வதற்கான விசாவினை குறிப்பிட்ட நாடுகளுக்கு எம்மூடாக விண்ணப்பிக்க முடியும். ( UK, ஜேர்மன், சுவிஸ், கொலன்ட். )

**SUN TRAVELS**

128, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

077 936 1427

( அனைத்து நாடுகளுக்கும் திருமணம் முடித்துச் செல்வதற்கான VISA ஒழுங்குகள் எம்மால் செய்து தரப்படும்.) (4681)

## வீடு விற்பனைக்கு உண்டு

பிரம்படி 2 ஆம் ஒழுங்கை கொக்குவிலில் 2 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு.

2 1/2 பரப்புக் காணி பிரம்படி லேன் 2ஆம் ஒழுங்கையில் வெட்டுக்கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. (4671)

**076 702 3565**

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK- 1025 /=Kg

0768226240

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

(C-505)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




194

யாழ். இந்துவின் மைந்தன்

**பற்குணராசா பிறணித்**

அவர்கள்

நடந்து முடிந்த புலமைப் பரிசில் பரீட்சையில் 194 புள்ளிகளைப் பெற்று தேர்ச்சி அடைந்துள்ளார். மென்மேலும் இவர் பல வெற்றிகளைப் பெற மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: கோண்டாவில் வாழ் மக்கள். (C-720)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




யா/ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் 2020ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி 182 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த சுழிபுரத்தைச் சேர்ந்த சண்முகநாதன் - கமலாதேவி, வயாவிளானைச் சேர்ந்த கதிரமலை - செல்வராணி ஆகியோரின் பேர்த்தியும் ஜெயகுமார் -சிவகௌரி தம்பதியினரின் சிரேஷ்ட செல்வப் புதல்வியுமாகிய

**ஜெ. சகானா**

அவர்களை பாராட்டுவதோடு மென்மேலும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

இவர் பரீட்சையில் வெற்றிபெற கல்வி கற்பித்த அதிபர், ஆசிரியர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்

அம்மப்பா, அம்மம்மா, அப்பா, அம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமா - அத்தை, அக்காமார், அண்ணா, தங்கைமார், தம்பிமார், மச்சான் - மச்சாள் (4680)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.11.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.